விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 14 சனிக்கிழமை (26.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 69




## சாள்ஸ் வருகிறார்

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சுமார் 6 மணிநேரம் மட்டும் இலங்கையில் தங்கியிருக்கும் சாள்ஸ் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை அலரி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் வழியிலேயே அவர் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-08)

## கருணா இந்திய நாளிதழுக்கு பேட்டி

(கொழும்பு)

அரசாங்கத்துடன் ஈ.பி.டி.பியினர் இணைந்திருப்பதால் அரசுடன் தான் தொடர்புகளைப் பேண விரும்பவில்லை என்று விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்டுள்ள கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்திய நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்பினை வகிக்கும் ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தவுடன் தான் தொடர்புகளைப் பேண விரும்பவில்லை என்று அவர் அப் பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேவேளை கருணா ஜனநாயகப் பாதைக்கு திரும்ப மறுத்து ஆயுதக் குழுவினரான ஈ.என்.டி.எல்.எவ். உடன் இணைந்து கொண்டமை குறித்து டக்ளஸ் தேவானந்தா அதிருப்தி வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வே விலக வேண்டும் என்றும், இந்திய அரசுக்கு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்றும் கருணா அந்தச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது இவ்வாறிருக்க கருணாவுக்கு இந்தியா ஆதரவு வழங்கி வருவதாக வெளியான தகவல்கள் குறித்து இந்தியத் தூதரகம் மறுப்புத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-4)

# பொதுக் கட்டமைப்பை உருவாக்க அரசு நேர்மையுடன் செயற்படுகிறது!

## எரிக்சொல்ஹெய்ம் இன்று கல்முனை விஜயம்

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் இன்று கல்முனைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடுவதற்காக அங்கு செல்லும் சொல்ஹெய்ம் மொகமட் பாலிகா வித்தியாலயத்தில் பல்வேறு தரப்பினர் கலந்து கொள்ளும் சந்திப்பொன்றிலும் கலந்துகொள்ளவுள்ளார். நேற்று காலி மாவட்டத்திற்கென விஜயம் செய்து எரிக் சொல்ஹேய்ம், அங்கு ஆழிப்

## ஜனாதிபதி – சொல்ஹெய்ம் சந்திப்பில் உறுதிமொழி

(நமது நிருபர்)



**சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத்திற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகிறது.**

**இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் உறுதியளித்துள்ளார்.**



இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் எரிக்சொல் ஹெய்ம், ஜனாதிபதியைச் சந்

இச் சந்திப்பின்போதே ஜனாதிபதி, எரிக்சொல்ஹெய்மிடம் மேற் கண்டவாறு உறுதியளித்தார்.

இச் சந்திப்பின்போது எரிக்

## இன்று கல்முனை விஜயம்

(கொழும்பு)

கொழும்பில் தங்கியுள்ள நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் இன்று கல்முனைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிடுவதற்காக அங்கு செல்லும் சொல்ஹெய்ம் மொகமட் பாலிகா வித்தியாலயத்தில் பல்வேறு தரப்பினர் கலந்து கொள்ளும் சந்திப்பொன்றிலும் கலந்துகொள்ளவுள்ளார். நேற்று காலி மாவட்டத்திற்கென விஜயம் செய்து எரிக் சொல்ஹேய்ம், அங்கு ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார். (ச)



(நமது நிருபர்)

**சுனாமி அனர்த்த மீள்கட்டுமானத்திற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகிறது.**

**இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் உறுதியளித்துள்ளார்.**

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் எரிக்சொல் ஹெய்ம், ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கையின் இனப்பூசல் மற்றும் சுனாமி அனர்த்த மீள் கட்டுமானப் பணி குறித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தினார்.

இச் சந்திப்பின்போதே ஜனாதிபதி, எரிக்சொல்ஹெய்மடம் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இச் சந்திப்பின்போது எரிக் சொல்ஹெய்ம் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி (12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளிடம் விமானங்களா! இந்திய-அமெரிக்கா அச்சம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இரண்டு சிறிய ரக விமானங்கள் இருப்பதாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட பரபரப்பான செய்தியினை அடுத்து இந்தியாவும் அமெரிக்காவும் உன்னிப்பாக புலிகள் அமைப்பை நோட்டம் விடுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

புலிகளிடம் விமானங்கள் இருந்தால் இந்தியாவின் பாதுகாப்புக்கு அது பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என இந்தியா கருதுகிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விமானங்களை விடுதலைப் புலிகள் தொடர்ந்து வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது என்றும் அதனை சுயாதீன அமைப்பு ஒன்றிடம் கையளிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு நெருக்குதல்களை இந்தியாவும் அமெரிக்காவும் கொடுக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-04)

# சாள்சைச் சந்தித்து பேச விடுதலைப் புலிகள் விருப்பம்

(கொழும்பு)

இங்கிலாந்தின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் குறுகியகால இலங்கைப் பயணத்தில், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றான மட்டக்களப்பும் அடங்குவதாகவும் இவருடன் கலந்துரையாட புலிகள் விருப்பமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ராய்டருக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

சாள்சை முழுமனதுடன் வரவேற்பதுடன் அவருடன் கலந்துரையாடுதையும் விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழ் சமூகமும் விரும்புகின்றது. அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு பிரமுகர்களாலும் புறக்கணிக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களின் நிலைமைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுக்குள் குத்துக்கரணம்

# சந்திரிகா அரசு அந்தரத்தில் இ.தொ.க. ஆதரவை விலக்கியது!

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவினை நேற்றுடன் விலக்கிக் கொண்டுள்ளது.

119 ஆசனங்களைக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து காங்கிரஸ் நேற்று தனது 8 ஆசனங்களுடன் வெளியேறியுள்ளது.

இதனால் அரசு தனது அறுதிப் பெரும்பான்மையினை இழந்து தற்போது திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறது.

இரு அமைச்சுக்களையும் தவிர ஏனைய 6 பேரும் ஏற்கனவே எதிர்க்கட்சி வரிசையில் தான் இதுவரை இருந்தார்கள்.

தற்போது இந்த இரு அமைச்சர்களும் பொறுப்புக்களை இராஜினாமா செய்த காரணத்தினால் அவர்களும் இனி எதிர்க்கட்சி வரிசையில் அமர்வார்கள் என முன்னாள் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.காங்கிரஸின் (முக்கிய தலைவர்களில் ஒருவருமான ஆர். யோகராசன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இராஜினாமாக் கடிதங்கள் ஏற்கப்படுகிறதோ, இல்லையோ எம்மைப் பொறுத்தவரை அவர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துவிட்டார் என அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும்போது நாங்கள் அரசிற்கு ஆதரவளிக்கவேண்டிய கடப்பாடு ஒன்று எமக்கு இருந்தது. இப்போது நாம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# லொறி கடலுக்குள்; நான்கு பேர் பலி

(கொழும்பு)

பேருவளை துறைமுகத்தில் உள்ள அலைத்தடுப்புச் சுவருக்கு மேலாகச் சென்ற லொறி தடம்புரண்டு கடலிற்குள் வீழ்ந்ததில் நான்குபேர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. கடலினுள் பாய்ந்த லொறியினுள் இருந்த அனைவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி அப்யரத்தின திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மற்றையவரின் சடலத்தை தேடும் பணியில் சுழியோடிகள் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# முகமாலை சூட்டுச்சம்பவம் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் அறிக்கை

(கிளிநொச்சி)

**கிளாலி முன்னரங்கப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் உள்நுழைய முற்பட்ட இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல். சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிக்கை ஒன்றை இன்று வெளியிட்டுள்ளது.**

அந்த அறிக்கை வருமாறு,

கடந்த புதன்கிழமை மாலை 4.15 மணியளவில் கிளாலி முன்னரங்கப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் உள்நுழைய முற்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் தற்காப்புத் தாக்குதலை மேற்கொண்டனர்.

கிளாலி நீரேரிக்கு அண்மையாக உள்ள பெண் போராளிகளின் முன்னரங்க நிலையிலிருந்து 40 மீற்றர் தூரத்தில் வேவு நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு ஆயுதங்கள் மற்றும தொலைநோக்கியுடன் நகர்ந்து வந்த இராணுவ அணியினர் கடமையில் நின்ற பெண் போராளிகளை நோக்கி துப்பாக்கியால் குறிபார்த்ததைத் தொடர்ந்து அவ்வணியினர் மீது எமது போராளிகள் மேற்கொண்ட தற்காப்புத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றுமொருவர் காயங்களுக்குள்ளானார்.

550 மீற்றர் சூனியப் பிரதேசமாக உள்ள இப்பிரதேசத்தில் எமது நிலையிலிருந்து 40 மீற்றர் வரை இராணுவத்தினர் வேவு நடவடிக்கைகளுக்காக நகர்ந்து வந்ததும் எமது போராளிகள் மீது தாககுதல் தொடுக்க முயன்றதும் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும்.

இந்நிலையில், தம்மைத் தற்காத்துக் கொள்வதற்காகவே எமது போராளிகள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் சம்பவம் நடைபெற்ற இடததிற்கு மாலை 6 மணியளவில் விஜயம் செய்து அந்த இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களின் முன்னிலையில் விடுதலைப்புலிகள் இறந்தவரின்உடலை முகமாலை சூனியப் பிரதேசத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் நடந்த அதே இடத்தில் கடந்த 15 ஆம் திகதியன்று ஓர் இராணுவ அணியினர் எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்து பெண் போராளிகள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் எமது போராளிகள் காயமடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முரணான வகையிலமையும் இவ்வகையான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கேற்ற நடவடிக்கைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக் கொளகிறோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## செயன் முறைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடாத்திவரும் மாலை கட்டுதல், கோலம்போடுதல், தோரணம் பின்னுதல் (செயன்முறைப்) போட்டி நாளை மு.ப.9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (க)

## பூங்கா அமைப்பு

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய ஸ்தாபகரின் நினைவாக சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலைக்கு அருகே ஸ்தாபக முதல்வரின் குடும்பத்தினரால் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது. (ப-74)

# அரசாங்கம் தன் நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்த வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் தங்களது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

சுதந்திரக்கூட்டமைப்பிற்குள் இருக்கும் பேதங்கள் காரணமாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லக்கூடிய வாய்ப்புக்கள் இல்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. அரசாங்கம் இவ்வாறான காரணங்கள் குறித்து ஒரு நிலைப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆகக்குறைந்தது சமாதான நடவடிககைகளுக்காக ஆரம்ப நிலை குறித்தாவது சிறிலங்கா சுதந்திரக கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே ஒரு இணக்கப்பாடு இருக்க வேண்டும் என அவர் கூறினார்.

கொழுமபில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில்கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியின பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை குறித்து இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

தமது கட்சியின் இணக்கப்பாடு



இன்றி அரசாங்கம் சமாதான நடவடிக்கைகள் குறித்து புதிய நிலைப்பாடொன்றைத் தெரிவித்திருபபதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வரவனச நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார். அவ்வாறு செயற்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக மக்கள் விடுதலை முன்னணி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

# இராசிபலன்

26.02.2005

மாசி 14, சனிக்கிழமை

துதியை பிற்பகல் 01.07 மணிவரை

உத்தரம் பிற்பகல் 5.08 மணிவரை

இராகுகாலம் 9.29 - 10.59 மணிவரை

சுபநேரம் 3.29 - 4.59 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, சத்துரு ஜெயம் |
| இடபம் | பணக்குறைவு, காரிய இடையூறு, அஜீரண ரோகம், குடும்பக் கவலை. |
| மிதுனம் | மனச் சஞ்சலம், கல்வியில் ஆர்வம், தன விரயம், முயற்சி தாமதம். |
| கடகம் | நற் கீர்த்தி, போசன நன்மை, எடுத்த கருமங்கள் கைகூடும், உறவினர் உதவி. |
| சிங்கம் | மனோ சங்கடம், போசனக் குறைவு, வாக்கு மேன்மை, தொழில் மந்த நிலை. |
| கன்னி | சயன சுகம், மாதர் நட்பு, புதிய முயற்சி, தேகநலன். |
| துலாம் | சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, சுபகாரியச் செலவு, சிறு வியாதி. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, செல்வாக்கு, போசன சுகம். |
| தனுசு | உற்சாகம், நன்கொடை, நல்ல வரவேற்பு, முயற்சி கைகூடும். |
| மகரம் | குடும்பக் கவலை, எதிர்பாராத செலவு, சரீப்பிரயாசை, முயற்சி தாமதம். |
| கும்பம் | மனப்பயம், வேலைக் கஷ்டம், வீண் பகை, பணக்குறைவு. |
| மீனம் | தேகநலன், போசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, பொருள்சேர்க்கை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வள்ளுவன்

# ஈராக்கில் உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி அனுதாபம் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்கிழக்கு ஈரானில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தமைக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஈரானிய ஜனாதிபதிககு இரங்கல் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.



சமீபத்தில் நாங்களும் இயற்கை பேரிடர் அனர்த்தங்களுக்கு இலக்கானோம், இத்தருணத்தில் உங்கள் துயரத்தில் நாமும் பங்கெடுக்கின்றோம் என அந்த இரங்கலில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

"பாதிக்கப்பட்ட மாகாணத்தில் இயல்பு நிலையை மீண்டும் தோற்று விப்பதற்கான தங்கள் நடவடிக்கைகளுக்கு எங்கள் உதவிக்கரத்தை நீட்டுவதற்குத் தயாராகவிருக்கின்றோம்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறுதிப்பாடான நட்புறவு, இரு நாடுகளையும் பிணைக்கும் சமூக உறவுகள் ஆகியவற்றையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நினைவுபடுத்தினார். (க-9)

## ஒன்றுகூடல்

(காரைநகர்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி கல்லூரி மண்டபத்தில் மாணவத் தலைவன் பொ.ஸ்ரீராமன் தலைமையில் இது நடைபெறும்.

இந் நிகழ்வில் தீவகக் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் வி.மகேந்திரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் திரு.திருமதி.செ.தயானந்தா, கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-246)

## மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உதவிவைத்திய அதிகாரிகள் பதிவு வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை யாழ்மாவட்ட கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவிருந்தது.

ஆனால், இக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் குறிப்பிட்ட நேரத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முன்னர் இயங்கிய இடத்தில் உள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் நடைபெறவிருப்பதாக உதவிவைத்திய அதிகாரிகள், பதிவு வைத்திய அதிகாரிகள், சங்கத்தின் தலைவர் யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ப-19)

# அரசின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையை உரியமுறையில் செயற்படுத்துவது என அரசாங்கம் தற்போது எடுத்துள்ள நிலைப்பாடு வரவேற்கத்தக்க விடயம் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பாக ஐ.தே.க. பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த போர்நிறுத்த உடன்படிக்கை சமாதானப் பாதைக்கான சீரான ஒரு பிரவேசமாகும் என்பதை அரசாங்கம் ஏறறுக் கொண்டுள்ளது.

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவின் கூற்றின் மூலம் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாகப் புலனாகின்றது.

போர்நிறுத்த உடன்படிக்கையை தவறாகப் புரிந்துகொண்டு ஐ.தே.கவை விமர்சித்த கூட்டமைப்பு அரசாங்கம் இன்று சரியான பாதையில் பிரவேசித்துள்ளமை குறித்து மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

எனினும் அரசாங்கத்தின் பிரதான தோழமைக் கட்சியான ஜே.வி.பி போர்நிறுத்த உடன்படிக்கையைக் கிழித்தெறிவோம் என தொடர்ந்தும் கூறிவருவது கவலைகுரியது என்றும் அந்த அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சாவகச்சேரி பிரதேசசபைக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபைக்கு "நிகொட்" நிறுவனத்தினால் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அரச அதிபரின் சிபார்சிற்கமைவாக இந்நீர் இறைக்கும் இயந்திரம வழங்கபபட்டது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி நகரசபையால் பேணப்படும் பொதுக்கிணறுகளை இறைத்து சுத்தம செய்யும் பணிக்காகவே இந்நீர் இறைக்கும் இயந்திரம் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இந்நீர் இறைக்கும் இயந்திரங்களையும் அதன் இதர உதிரிப்பாகங்களையும் யாழ்.செயலகத்தில உள்ள "நிகொட்" திட்டப்பணிப்பாளரிடம் இருந்து சாவகச்சேரி நகர சபைச செயலாளர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப-47)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தால்

இந்த பெப்ரவரி 22ஆம் திகதியுடன் இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான, 'யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் முழுமையடைகின்



றன. புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகின்ற இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் மூன்றாண்டு காலத்தில் தமிழீழ மக்களுக்கு தந்தது என்ன? அல்லது வெளிப்படுத்தியது தான் என்ன? என்பது குறித்துத் தர்க்கிப்பது இவ்வேளையில் பொருத்தமானதாக இருக்கும்.

நீண்ட ஆலோசனைகளுக்கும் கருத்துப் பரிமாற்றங்களுககுப் பின்னர் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்ட இந்தப் புரிந்துணாவு ஒப்பந்தம் வெளிப்படுத்திய கருத்துக்கள் குறித்து முதலில் கவனம்செலுத்த வேணடும். அதனூடே எழுத்து வடிவத்திற்கும் யதார்த்த நிலைக்கும் உள்ள ஒற்றுமையையும, முரணபாட்டையும் நோக்குவது தெளிவினைத் தரக்கூடும்.

இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் முன்னுரையில் உள்ள முதல் பந்தி கீழ்வருமாறு கூறுகின்றது:-

"இலங்கையில் நடைபெற்றுக கொண்டிருக்கும் இனத்துவ முரண்பாட்டிற்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்றைக் காண்பதே இலங்கை ஜனநாயக சோசலிசக்

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் இப்பந்தியின் கடைசிச் சொற்களான இதுவே ஒட்டு மொத்தமான நோக்கமாகும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. அந்த முதல பந்தியினை இப்பொழுது மண்டும் வாசித்தால் ஒரு தெளிவான பார்வை தென்படலாம்.

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனத்துவ முரண்பாட்டிற்கு, பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்றைக் காண்பதே இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஒட்டுமொத்தமான நோக்கமாகும்.

இதனை இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேலுமொரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

"இலங்கை அரசும் விடுதலைபபுலிகளும் பகைமைக்கு முடிவைக் கொண்டு வந்து மோதலினால் பாதிக்கப்பட்ட அனைத்து குடிமக்களினதும் வாழக்கை நிலையை மேம்படுத்துவதன் முக்கியதுவத்தை இனஙகண்டுள்ளனர்."

இந்தச் சொல்லாக்கங்கள் மேலும் சில விடயங்களை ஏறறுக் கொண்டுள்ளன. அவை வருமாறு,

1.'மோதலினால் குடிமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்'

2.'அவர்களுடைய வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும்.'

3. மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டியது ஒரு முக்கியமான விடயமாகும்.


4. இந்த முக்கியத்துவத்தை இருதரப்பினரும் (அதாவது இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும்) இனங்கண்டுள்ளார்கள்.

5.மோதலினால் பாதிக்கப்பட்ட குடிமக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு முதலில் பகைமைக்கு முடிவைக் கொண்டு வரவேண்டும்.

ஆனால் இந்த மூன்று ஆண்டுகளில் பகைமைக்கு முடிவு கொண்டு வரும் முயற்சிகளை இலங்கை அரசு எவ்வாறு மேற்கொண்டது என்பது குறித்து

ராளிகளின் படுகொலைகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 1.2 மற்றும் 1.13 ஆகிய சரத்துக்களை மீறிய செயல்களாகும்.

அதுமட்டுமல்ல இயல்பு நிலையை மீளக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை விபரிக்கின்ற சரத்து இரண்டின் பல பிரிவுகளை இலங்கை அரசு மீறியே வந்துள்ளது. ஆக்கிர மிக்கப்பட்டுள்ள பாடசாலைக் கட்டிடங்கள் வணக்கத்துக்குரிய தலங்கள், பொதுச்சேவைக்கான கட்டிடங்களை விட்டு இலங்கை இராணுவம் இன்னும் விலகா



மல் இருப்பது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் 2.2, 2.3, 2.4 ஆகியவையை மீறிய விடயங்களாகும்.

தமிழீழ விடுதலைப் புலிக

நிறுதத மீறல்களை இலங்கை அரச படைகள் புரிந்து வந்த போதும் பொறுமை காத்து வந்தார்கள் விடுதலைப்புலிகள். ஆனால் ஜப்பான் நாட்டில நடைபெறவிருந்த பிரதான உதவி வழங்குவோர் மாநாட்டிற்குரிய ஆயத்தம் செய்வதற்கான முன்னோடியான கூட்டம் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் இடம்பெற்ற போது அககூட்டத்திற்குத் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் தவிர்க்கப்பட்ட போது தான் இறுக்கமான முடிவொன்றை விடுதலைப் புலிகள் மேற்கொண்டார்கள்.


சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டார்கள். எத்தனையோ இழப்புக்களையும் யுத்த நிறுத்த மீறல்களையும் சந்தித்த விடுதலைப்புலிகள் இந்த விடயத்தில் மட்டும் இறுக்கமான முடிவை எடுத்ததன் காரணம் மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களது வழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கான அக்கறை எதுவும் இலங்கை அரசிற்கும் சம்பந்தப்பட்ட சில நாடுகளுக்கும் இல்லை என்பது வெளிப்படையாகவே நிரூபணம் ஆகியது தான காரணம்.

அதற்கு எதிரான அரசியல் அழுத்தத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு விடுதலைப் புலிகள் கொடுக்கத் தயங்கவில்லை.

இதற்குப் பின்னர் தமிழீழ

ததை அனைவரும் அறிவர்.

இதேவேளை,1995ஆம் ஆண்டு ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் ஓர் இரவிலேயே அகதிகளாகி குடாநாட்டை விட்டு வெளியேறிய போது உலக நாடுகள் சார்பாக எமது மக்களுக்காக ஒரு குரல் உரக்க ஒலித்தது. தமிழ் மக்களுக்கு மனிதாபிமான முறையில் உதவிகளைச் செய்ய வேண்டும என்று எழுந்த குரலுக்குச் சொந்தக்காரன் ஐக்கிய நாடுகள் சபையின் அன்றைய பொதுச்



செயலாளரான பூத்ரஸ் பூத்ரஸ் காலி அவர்கள். அந்தச் சமயம் பூத்ரஸ் காலியை மிக வன்மையாகக் கண்டித்தவர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர். அதே போன்று இன்று கெளசல்யன் முதலானோரின் படுகொலைகளைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபையின் இன்றைய செயலாளரான கோபி அனான்

# தமிழ் பேசும் மக்கள்

ளின முக்கிய போராளிகள் பிரமுகர்களைப் படுகொலை செய்வதிலும், கருணா போன்றவர்களை முன்னிறுத்திப் பிரதேசவாதத்தைத் தூண்டி விடுவதிலும், விடுதலைப்புலிகளின் வணிகக் கப்பல்களை அழிப்பதிலும் இலங்கை அரசும் அதன் பாதுகாப்புப் படையினரும் ஈடுபட்டு வருவதானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் எதிர்பார்ப்பான பகைமைக்கு முடிவைக் கொண்டு வருவதற்கு எதிரான செயற்பாடாகும்.இதில் ஒரு கருத்தை வித்தியாசமான கோணத்தில்

விடுதலைப் புலிகள் வழங்கிய இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்குரிய திட்டவரைவும் பலத்த எதிர்ப்புக்களைக் கண்டது. இன்றைய தினத்தில் இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையானது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் சுனாமி அனர்த்தங்களுக்கான நிவாரணப் பணிகள் எவ்வளவு எளிதாகவும் விரைவாகவும் சிறப்பாகவும் செயல்படுத்தபட்டிருக்கும் என்பதனை எணணிப் பார்ககாமல் இருக்க முடியவில்லை.

இரண்டு தசாப்த காலத்திற்கும மேலாக, அரச பயங்கரவாதப போருக்கு முகம் கொடுத்து, அல்லல்பட்ட எமது மக்களின் நாளாந்த வாழ்வியல் பிரச்சினைக்

கண்டனம தெரிவித்தபோது லக்ஷ்மன் கதிர்காமர் மீணடும் தனது ஆட்சேபத்தை தெரிவிக்க மறக்கவில்லை. கதிர்காமரின் புரிந்துணர்வு, சந்திரிகா அம்மையாரின் புரிந்துணர்வு, இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் புரிந்துணர்வு, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் புரிந்துணர்வு இவையெல்லாம் எப்படியானவை என்பதையாவது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிக் கொண்டு வந்திருப்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அரச பயங்கரவாத அனர்த்தங்களையும் இயற்கை தந்த அனர்த்தங்களையும் எமது மக்கள் எதிர்கொண்டுள்ள வேளை

# புரிந்து கொண்டது என்ன?

தத்தின் முன்னுரையில் உள்ள முதல் பந்தி கீழ்வருமாறு கூறுகின்றது:-

“இலங்கையில் நடைபெற்றுக கொண்டிருக்கும் இனத்துவ முரண்பாட்டிற்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு ஒன்றைக் காண்பதே இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும ஒட்டு மொத்தமான நோக்கமாகும்.’’

இந்தப் பந்தியில் எடுத்தாளப் பட்டிருக்கும் சொல்லாக்கமான:-

‘நடைபெற்றுக்கொண்டிருக்கும், இனத்துவ முரண்பாடு’, ‘பேச்சுவார்த்தை’, ‘தீர்வு’, ‘ஒட்டுமொத்தமான நோக்கு’ -என்பனவற்றின் கருத்துக்களை முதலில கவனித்தால்,

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனத்துவ முரண்பாட்டிற்கு- என்ற சொல்லாக்கம இரண்டு விடயங்களை ஏற்றுக் கொண்டு அவற்றைச் சுட்டிக் காட்டுகின்றது. இலங்கைத் தீவிலே இனத்துவ முரண்பாடு என்று ஒரு பிரச்சனை இருக்கின்றது என்பதையும் அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் மூன்றாண்டுகளுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட இவ் ஒப்பந்தம் ஏற்றுககொண்டுள்ளது.

ஆகவே சில தரப்பினர் கூறுகின்ற,கூறி வருகின்ற ‘பிரச்சினை எதுவும் இல்லை’ என்ற கூற்றானது இந்த ஒப்பந்த முன்னுரையின் முதல் பந்தியின் முதல் வரியிலேயே அடிபட்டுப் போகினறது.

அடுத்த சொல்லாக்கமான ‘பேச்சுவார்த்தை மூலமான தீர்வு’ என்பதைக் கவனிப்போம். இவை இரண்டு முக்கிய விடயங்களை வலியறுத்துகின்றன. அதாவது இந்த ‘இனத்துவ முரண்பாட்டிற்கு’ ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் அது பேச்சுவார்த்தை மூலமாகக் காணப்பட வேணடும் என்பதையும் இச்சொல்லாக்கங்கள் முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நாம் காணலாம்.

நிலையை மேம்படுத்துவதற்கு முதலில் பகைமைக்கு முடிவைக் கொண்டு வரவேண்டும்.

ஆனால் இந்த மூன்று ஆண்டுகளில் பகைமைக்கு முடிவு கொண்டு வரும் முயற்சிகளை இலங்கை அரசு எவ்வாறு மேற்கொண்டது என்பது குறித்து இரண்டு கருத்துக்களுக்கு இட மிருக்க முடியாது. கடந்த மூன்று ஆண்டுகளில் சமாதானத திற்காக, விடுதலைப்புலிகள் கொ டுத்த, கொடுத்து வருகின்ற விலை அளப்பரியது என்பதைக் கடந்த காலச் சம்பவங்களே எடுத்துக் கூறும்.!

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து, விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல்கள் மூழ்கடிக் கப்பட்டதோடு அதில் பணியாற்றிய விடுதலைப்புலிகள் கொல்லப்பட்ட சம்பவத்தையும், அண்மையில் படுகொலை செய்யப்பட்ட மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளருமான லெப்டினன்ட் கேணல் கௌசல்யன மற்றும் சகபோராளிகளினதும் மாமனிதர் சந்திரநேருவினதும் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களையும் உதாரணத்திற்காக நாம் இங்கே சுட்டிக்காட்ட முடியும்! அதுமட்டுமல்ல, கருணா போன்ற துரோகச் சக்திகளை இன்றும் ஒரு முகமூடியாக உபயோகித்து அதன்மூலம் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உடைத்தெறியும் செயல்களில் இலங்கை அரசு ஈடுபட்டு வருவதை நாம் அனைவரும் அறிவோம்.

இச்சம்பவங்கள் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் பல தடவை மீறப் பட்டுள்ளதைக் காட்டுகின்றன.

எடுத்துக்காட்டாக சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் வணிகக்கப் பல்கள் மீது இலஙகைக் கடறபடையினர் மேற்கொண்ட தாக்குதல், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் 1.2 மற்றும் 1.2(ஊ) ஆகியவற்றிற்கு முரண்பட்டவையாகும். கௌசல்யன் மற்றும் சகபோ

வணிகக் கப்பல்களை அழிப்பதிலும் இலங்கை அரசும் அதன் பாதுகாப்புப் படையினரும் ஈடுபட்டு வருவதானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் எதிர்பார்ப்பான பகைமைக்கு முடிவைக் கொண்டு வருவதற்கு எதிரான செயற்பாடாகும்.இதில் ஒரு கருத்தை வித்தியாசமான கோணத்தில் நோக்கினால் புரிந்துணர்வு ஒப்பந்தம் பகைமைக்கு முடிவைக் கொண்டு வர வேண்டும்.அதற்கான காரணத்தை புரிந்துணர்வு ஒப்பந்தம் கீழ்வருமாறு கூறுகின்றது.

மோதலினால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடிமக்களினதும் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக பகைமைக்கு முடிவைக் கொண்டு வரவேண்டும்.

ஆகவே இலங்கை அரசும் அதன படைகளும் பகைமைக்கு முடிவைக் கொண்டுவர விரும்பாததன் காரணம்,அடிப்படைக் காரணம்,மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்க்கை நிலை மேம்படுத்தப்படக் கூடாது என்ற எண்ணம் தான் என்பது இங்கே நிரூபிக்கப்படுகின்றது.

இந்தத் தர்க்கங்களைப் பின்புலமாக வைத்துக் கொண்டு மற்றைய அரசியல் நிகழ்வுகள குறித்துச் சிந்திப்போம். இலங்கை அரசும் அதன் படைகளும் பகைமைக்கு முடிவைக் கொண்டு வரவிரும்பாது,இத்தனை யுத்த நிறுத்த மீறல்களையும நடாத்திய போதும் கூட விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக் களையோ அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தையோ முறித்துக் கொள்ளவில்லை. காரணம மோதலினால் பாதிக்கப்பட்ட அனைதது்க் குடிமக்களினதும் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும் என்பதனை நிறைவேற்றுவதற்காகத்தான்.

அதற்காகத்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் பல ஆலோசனைக் கூட்டங்களிலும கலந்துகொண்டார்கள். பல யுத்த முறைப்படுத்தப் பட்டிருந்தால் சுனாமி அனர்த்தங்களுக்கான நிவாரணப் பணிகள் எவ்வளவு எளிதாகவும் விரைவாகவும் சிறப்பாகவும் செயல்படுத்தப பட்டிருக்கும் என்பதனை எணணிப் பார்ககாமல் இருக்க முடியவில்லை.

இரண்டு தசாப்த காலத்திற்கும மேலாக, அரச பயங்கரவாதப போருக்கு முகம் கொடுத்து, அல்லல்பட்ட எமது மக்களின் நாளாந்த வாழ்வியல் பிரச்சினைக்கும் தேசியப் பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தர்வு பேச்சுவார்த்தைகளின் ஊடே கிட்டவேண்டும் என்பதற்காக இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்கப்பட்டது. ஆனால் போரினால் விளைந்த அழிவுகள் குறித்து எவ்வளவு அலட்சியத்தை இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு காட்டியதோ அதே அளவு அலட்சியத்தை சுனாமி ஆழிப்பேரலை இயற்கை அழிவின் போதும் காட்டுவதை கண்கூடாகக் காணமுடிகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் சுனாமி அனர்த்தங்களைப் பார்வையிடும் போது அவரைத் தமிழர் தாயகப் பகுதிகளுக்குச் செல்ல விடாமல் இராஜதந்திர அழுத்தங்களை இலங்கை அரசு பிரயோகித்

பாதுகாப்புப் படையினரின் புரிந்துணர்வு, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் புரிந்துணர்வு இவையெல்லாம் எப்படியானவை என்பதையாவது இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வெளிக் கொண்டு வந்திருப்பதை ஒப்புக் கொள் ளத்தான் வேண்டும்.

அரச பயங்கரவாத அனர்த்தங்களையும் இயற்கை தந்த அனர்த்தங்களையும் எமது மக்கள எதிர்கொண்டுள்ள வேளையில் எமது மக்களுக்கு இயல்பான வாழ்க்கை நிலை திரும்பி அவர்களுடைய வாாழ்க்கை நிலை மேம்படவேண்டும் என்பதற்காகவும் எமது மக்களுடைய தேசியப் பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் தமிழீழத் தேசியத் தலைவர் அரசியல் ரீதியாகக் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் வேளை இது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மூன்றாண்டுகளை நிறைவு செய்கின்ற இவ்வேளையில் இவை யாவற்றையும் நெஞ்சில் நிறுத்தித் தலைமையின் கரங்களை பலப்படுத்துவோமாக.

**நன்றி**
**இணையத்தளம்**

# மேலும் 25 மில்லியன் அமெ.டொலரை உலகவங்கி இலங்கைக்கு வழங்கும்

இலங்கைக்கு மேலதிகமாக 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு உலாகவங்கி நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை,சுனாமிப் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு நடவடிககைகளுக்காக இம்மாதம் உலகவங்கி 150 அமெரிக்கன் டொலர்களை வழங்கியுள்ளது.

இதில் 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 45 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை கடனாக வழங்குவதற்கு உலக வங்கி தீர்மானித்துள்ளது.

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கும் பாதிக்கப்பட்ட பகுதிகளில உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கும் இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக உலகவங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த நிதியினை ஒதுக்கும் வகையில் உலகவங்கி நெகிழ்வுப் போக்குடன் செயற்பட்டதாக உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார். இதற்கிடையில் இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு 1.5 அல்லது 1.6 மில்லியன் தேவை என சர்வதேச அமைப்புக்கள் மதிப்பீடு செய்துள்ளது. (க-9)




# மகிழ்ச்சியாக வாழ என்ன தேவை?

'என் வாழ்க்கையின் அர்த்தம் என்ன?' என்று சில சமயங்களில் நாம் எண்ணி வருந்துவது உண்டு. செய்துமுடிக்காத வேலைகள், தூக்க மின்மை, பணப்பிரச்சினைகள் ஆகியவை நம் கோபத்தை மேலும் மேலும் அதிகப்படுத்தி, 'நமக்கு நிம்மதியே கிடைக்காதா? நம்மைத் தவிர வேறு யாருக்கும் இந்தமாதிரி பிரச்சினைகள் இல்லையே' என்று நினைக்க வைக்கும் வாழ்க்கையில் முக்கியமானது எது என்பதை முடிவு செய்யவும், தினந்தோறும் நீங்கள் மகிழ்ச்சியுடன் வாழவும், சோர்வைத் தூக்கி எறிந்துவிட்டு புத்துணர்ச்சி பெறவும், கீழே தரப்படும் எளிய முறைகள் உங்களுக்கு அவசியம் உதவும்.

நீங்கள் செய்வது அனைத்திலும் சிறக்கவேண்டும் என்ற வெறியுடன் செயற்படுபவரா? அல்லது குறையற்றவராக இருக்க முயற்சிப்பவரா? என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். இந்த எளிய முறைகள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டள்ளன.

முதல் பகுதி உங்களுக்கு சில உண்மைகளைப் புரியவைக்கும்.

ரீ.வியில் வரும் அந்த அழகான பெண்ணைப் போல், ஒரு சிறந்த மனைவியாக, தாயாக, மொத்தத்தில் ஒரு சூப்பர் பெண்மணியாக இருக்க அனைவருக்கும் ஆசை!

ஆனால் அது சாத்தியமா என்றும் நாம் யோசக்க வேண்டும்! அப்படி இருக்கவேண்டும் என்ற முயற்சியில் நாம் யார் என்பதை மறந்து வீண் கவலைக்கு ஆளாகிறோம். மற்ற சராசரி மக்களுடன் நம்மை ஒப்பிடாமல் சினிமா ஸ்ரார்களுடனும் அழகான மாடல்களுடனும் நம்மை ஒப்பிடுகிறோம். இதனால், நம்மிடம் உள்ள குறைகளே நம் கண்களுக்குத் தெரிகிறது.



சினிமாவிலும், விளம்பரங்களிலும் வரும் சுத்தமான வீடுகளைப் போல நம் வீடு இல்லையே என்றும் நம்மில் பலர் வருத்தப்படுவது உண்டு. நம்மை மாற்றுவது ஒரு பக்கம் இருக்கட்டும். நம் வீட்டில் இருப்பவர்களும் கதைகளில், படங்களில் வரும் கதாபாத்திரங்களைப் போல் இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். இப்படி நம் எதிர்பார்ப்பின் பட்டியல் நீண்டுகொண்டே போவதால் தாழ்வு மனப்பான்மையும், நிம்மதியற்ற நிலையும் ஏற்படுகிறது.

உண்மை வாழ்க்கையில், உங்களுக்குத் தெரிந்த எத்தனை பெண்கள் எப்போதும் வீட்டை சுத்தமாகவும் அதேநேரத்தில் தன்னை மாடல் அழகிபோலவும் வைத்துக் கொள்கின்றனர்?

சமீபத்தில் நடந்த ஒரு ஆய்வில் தெரியவந்த உண்மைகள்:
* 97% மக்கள் தங்கள் வாழ்க்கை மாறினால் தான் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நம்புகின்றனர். *85% மக்கள் வீட்டுக்கு விருந்தினர் வருவதற்கு முன்புதான் வீட்டைச் சுத்தம் செய்கிறார்கள். *75% மக்கள் சேமிக்க வழியின்றி திண்டாடுகிறார்கள். *70% மக்கள் வீட்டில் இருக்கும்போது அழகாகத் தோன்ற முயற்சி எடுப்பதில்லை. *60% மக்கள் தாங்கள் செய்ய நினைத்த வேலைகளை நேரத்திற்கு செய்துமுடிப்பதில்லை.

நம்மிடம் உள்ள குறைகளை ஒப்புக்கொண்டு அதை மாற்ற முயல்வதே சிறந்தது. அதைவிட்டு நான் குறையற்றவள் என்பதை நிரூபிக்க நினைப்பது வீண் கவலையை மட்டுமே தரும்!

அனைத்திலும் சிறக்க வேண்டும் என்ற எண்ணம் நம் மகிழ்ச்சியைக் குறைத்து, கவலைகளைத் தான் அதிகப்படுத்துகிறது.

மேலே உள்ள குறிப்புகளைப் படித்துவிட்டீர்களா? இதோ நீங் கள் வீட்டில் செய்ய ஒரு பயிற்சி:

ஒரு பேப்பரும், பேனாவும் எடுத்து இரண்டு பட்டியல்களைத் தயாரியுங்கள். முதல் பட்டியலில் நீங்கள் எது கிடைத்தால் /மாறினால் வாழ்வில் மகிழ்ச்சி கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள் என்பதைப் பற்றி எழுதுங்கள். இரண்டாவது பட்டியலில், நீங்கள் மகிழ்ச்சியாக இருந்த நேரங்களைக் குறிப்பிடுங்கள். இந்த இரண்டு பட்டியல்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் மகிழ்ச்சியுடன் வாழ என்ன தேவை என்பது உங்களுக்கே புரியும்.

# காலை உணவை தவிர்த்தால் இதய நோய் வரும்!

காலை உணவை தவிர்ப்பது உடல் பருமன் மற்றும் இதய நோய் போன்ற ஆபத்துக்களுக்கு வித்திடும் என்று புதிய ஆய்வுத் தகவல் ஒன்று கூறுகிறது.

காலை உணவைத் தவிர்க்கும் ஆரோக்கியமான பெண்கள் பகல், இரவு வேளைகளில் கூடுதலாகச் சாப்பிடுவது தெரிய வந்துளளது. இதனால் இதயத்துக்கு கெடுதல் செய்யும் எல்டிஎல் கொலஸ்ரோல் அளவு அதிகரித்தது. ஆனால் தினந் தோறும காலை உணவை தவறாமல் சாபபிட்டு வரும் பெண்களுக்கு இதுபோன்ற பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை.

எல்.டி.எல் கொழுப்பு அளவு அதிகரிப்பதும், இன்சுலினின் இயல்பான தன்மையில் பாதிப்பு ஏற்படுவதும் உடல் பருமன் மற்றும் இதயநோய்களுக்கு முக்கியமான காரணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது குழந்தைகளில் தொடங்கி பெரியவர்கள் வரை காலை உணவைத் தவிர்பது சாவ சாதாரணமாகி விட்டது. அலுவலகம், பள்ளிகளுக்குச் செல்லும் அவசரத்தில் இபபடிச் செய்கிறார்கள் ஆனால் அது எவ்வளவு பெரிய விபரீதத்தை ஏற்படுத்தும் என்பதை இதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

# அழகாக இருந்தால் மட்டும் போதாது!

அழகாய் மூக்கும் முழியுமாக இருக்கிறோம் என்பதனால் பல பெண்களுக்குத தங்களைப் பற்றிய கர்வம் அதிகம். இப்பெண்களுக்கு முன்னால் அவர்களது பெற்றோர்களே அவள் அழகுபற்றிப் பெருமைப்பட்டுக்கொள்வதாலும், தோழிகள், ''நீ அச்சொட்டாக சிம்ரன் மாதிரியே இருக்கிறாய்...', 'ஜோதிகாவை உரித்துவைத்த மாதிரியே இருக்கிறது...' என்றெல்லாம் சொல்வதாலும் தனது அழகைப் பற்றி இவர்களுக்குச் செருக்கு அதிகமாகிவிடுகிறது.

இவர்கள் தமது அழகைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம் அதில் தவறில்லை. ஆனால் அழகு மட்டும் போதாது என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். காதலிப்பதற்கு அழகு போதுமானதாக இருக்கலாம். வேலை கிடைப்பதற்கும் அழகு அவசியமாக அமையலாம். ஆனால் உங்கள் குணமும் மனமும் அழகாக, பிறரை ஈர்ப்பதாக அமையாவிட்டால் காதல் கசந்து திருமண வாழ்வு போர்க்களமாகிவிடும். அலுவலகத்திலும் திறமையையும், சமயோசிதப் புத்தியையும், அனுசரித்துப்போகும் பண்பையும் காட்டாவிட்டால் அங்கே எவரும் அழகை ஆராதிக்க மாட்டார்கள்.

அழகாகப் பிறந்தோம் என்பதால் அறிவை வளர்க்காமல் திமிரை வளர்த்தால் அந்த அழகில் பிரயோசனம் இல்லை. புற அழகைவிட அக அழகுதான் முக்கியம். புற அழகுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் சினிமாவில் கூட முதலில் அழகுக்காக வலம் வரும் நடிகைகள் உடனடியாகக் காணாமல் போவது நிதர்சனம். அழகு சற்றே குறைந்தாலும் திறமை இருப்பவர்கள் என்றும் வெற்றிக்கொடி நாட்டி வருவது தெரிந்த விஷயம்.

சில பெண்கள் தமது அழகுத் திமிர் காரணமாக படிப்பைக் கோட்டைவிட்டு வருகிறார்கள். ஆண்கள் தம்மைப் பார்க்கிறார்கள் என்ற அக்கறையிலேயே காலத்தைக் கடத்தி படிப்பைக் கோட்டைவிட்டு விடுகிறார்கள். வயது ஏறும்போது தான் தாம் அழகுக் கர்வத்தினால் அறிவை இழந்தது இவர்களுக்குப் புரியும்.

ஏனெனில் கல்யாணத்திற்குப் பெண்பார்க்க வருகிறவர்கள் வெறும் அழகுக்காக மட்டும் பெண்ணைத் திருமணம் செய்ய முன்வருவதில்லை. என்ன வேலை செய்கிறாள்? கொம்பியூட்டர் தெரியுமா? என்ன படிப்பு படித்திருக்கிறாள்? என்றுதான் கேட்பார்கள. குணவதியா? குடும்பப்பாங்கானவளா? என்றுதான கேள்வி எழுப்புவார்கள். பெண் அழகாக இருக்கிறாள் என்பதற்காகச் சீதனத்தை எவரும் குறைத்துக்கொள்ளப் போவதில்லை. இந்த யதார்த்தத்தையும் பெண்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சில பெண்கள் வெண் குதிரை மீதேறி இராஜகுமாரன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளுவான் என்ற கற்பனையில் மூழ்கிக் கிடப்பார்கள். இந்தக் கற்பனையால் பெற்றோர் பார்க்கும் வரன்களை எல்லாம் மூக்குச் சரியில்லை.. கறுப்பு நிறம், நடை சரியில்லை, தேங்காய்த்துருவிப் பல்.. எனப் பல காரணங்களைக் காட்டி வரும் ஆண்களை



எல்லாம் தட்டிக்கழித்துவிட்டு கமலஹாசனுக்கும், விஜய்க்குமாகக் காத்திருப்பார்கள் வயது ஏறிச் செல்வதை உணராமல்.

அழகு ஒரு கொடைதான். நிச்சயமாக! ஆனால் அறிவும், யதார்த்தப் பார்வையும் இல்லாத அழகால் பிரயோசனம் கிடையாது. புற அழகைவிட அக அழகுதான் நிரந்தரம். அதுவே மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கௌரவத்தையும் தரும். புற அழகு கொடை என்றால் அக அழகு கவசகுண்டலம் மாதிரி. பெண்கள் ஆராதக்கப்படுவதும், கௌரவிக்கப் படுவதும் புற அழகுக்காக அல்ல. அக அழகுக்காகவே என்பதை அழகிய பெண்கள் உணர்ந்து கொண்டல் அவர்கள் பேரழகிகளாகி விடுவார்கள்.

# ஆரோக்கிய குறிப்புகள்

* வயிறு புடைக்க உண்ணக்கூடாது.
* சீரான உழைப்பும், உடற்பயிற்சியும் உடல் ஆரோக்கியத்திற்கு அதி முக்கியம்.
* அதிகாலையில் எழுந்திருப்பதுவும், இரவு காலநேரத்தோடு உறங்குவதும் அதி முக்கியம்.
* சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும்.
* வீட்டில் உள்ள ஒருவருக்கு தொற்றுநோய் இருக்குமாயின் மற்றவர்களுக்கு அது தொற்றாமல் தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

# சமைத்துச் சுவைப்போம்

## புளிமோர் உப்புமா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| புளித்த தயிர் – | 1/4 லீற்றர் |
| புழுங்கல் அரிசி – | 1/4kg |
| முளைத்த பாசிப்பயறு – | 1 டேபிள் ஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் – | 4 |
| உப்பு – | தேவையானளவு |
| மஞ்சள் தூள் – | 1/4 தே.கரண்டி |
| தேங்காய் துருவியது – | 1/2 கப் |
| எண்ணெய் – | தேவையானளவு |
| கடுகு,உ.பருப்பு,க.பருப்பு – | தாளிப்பதற்கு |

***செய்முறை:***

புழுங்கலரியைக் கழுவி புளித்த தயிரில் ஊறவைத்து விடவேண்டும். ஒருமணி நேரம் ஊறினால்போதுமானது. முதல் நாளே பாசிப்பயறை ஊறவைத்து தண்ணீர் வடியவைத்து மூடி வைத்துவிட்டால் முளைவிட்டிருக்கும்.

ஊறிய அரிசியை மிக்ஸியில் போட்டு அதனுடன் துருவிய தேங்காய், உப்பு, மிளகாய், மஞ்சள்தூள் சேர்த்து சிறிது சொரசொரப்பாக அரைத்துக் கொள்ளவேண்டும். அடுப்பில் வாணலியில் எண்ணெயை ஊற்றி கடுகு, உ.பருப்பு, க.பருப்பு போட்டுத் தாளிக்கவும். சிறிது சிவந்தபின் முளைத்த பாசிப் பயறைப் போட்டு சிறிது வதக்கவும். பின் அரைத்த விழுதைப் போட்டுக் கிளறவும். இருபது நிமிடம் கிளறி விட்டுக்கொண்டே இருந்தால் நன்கு பொலபொலவென்று உதிரியாக இருக்கும. இது சாப்பிட சுவையாக இருக்கும்.

# காஷ்மீர் சட்டமன்ற வளாகத்தில் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல்

## 7 பேர் பலியானதாக தகவல்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் சட்டமன்ற வளாகத்துக்குள் புகுந்து தீவிரவாதிகள் நேற்று தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டனர். இங்கு நடந்த கடும் சண்டையில் 7 பேர் பலியானார்கள்.

காஷ்மீர் மாநிலத்தில் தற்போது கடுமையாக பனி பெய்துவருகிறது.

பனிமழைக்கு பலர் பலியாகி விட்டார்கள். இந்த நிலையிலும் காஷ்மீர் தீவிரவாதிகள் நேற்று பகல் தலைநகர் ஸ்ரீநகரில் திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள்.

அங்கு ஜீலம் நதிக்கரையில் தாங்கிபோரா பகுதியில் மாநில சட்டமன்றம், பழைய தலைமை செயலகம போன்ற முக்கிய கட்டடங்கள் அமைந்துள்ள அரசு அலுவலக வளாகத்துக்குள் 2 தீவிரவாதிகள் அதிரடியாகப் புகுந்தனர்.

தீவிரவாதிகள் இந்த வளாகத்துக்குள் நுழைந்தபோது அங்கு பலத்த பாதுகாப்பு இருந்தது. இருப்பினும் கையெறி குண்டுகளை வீசிய தவிரவாதிகள் அதிரடியாக உள்ளே புகுந்து கண்மூடித்தனமாகச் சுட்டனர்.

அரசு மண்டல தலைமை அலுவலகத்துக்குள் தீவிரவாதிகள் புகுந்தபோது அங்கு சுமார் 200 ஊழியர்கள் பணியில் இருந்தார்கள்.

தீவிரவாதிகளைக் கண்டதும் அவர்கள் அலறியடித்து ஓடினார்கள். இராணுவததுக்கு இதுபற்றி உடனடியாகத் தகவல் பறந்தது. இராணுவததினரும், மத்திய ரிசர்வ் பொலிஸ படையினரும் அந்த கட்டடத்தைச் சுற்றி சூழ்ந்து ஊழியர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். அதில் பெரும்பாலான ஊழியர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். (க)



கடந்த சில நாட்களாக கடுமையான பனிப்பொழிவினால் பாதிக்கப்பட்ட காஷ்மீரில் நேற்று முன்தினம் பனிப்பொழிவு சற்று குறைந்திருந்தது. இதனால் பனிப்பாறைகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி விரைவாக நடைபெற்றது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப்பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டன. சாலைகளில் பனிப்பாறைகளை அப்புறப்படுத்தி வாகனங்களை மீட்கும் காட்சி.

# ஈராக்கில் கார்குண்டுவெடிப்பு

## 15 பேர் பலி; 22 பேருக்கு காயம்


சதாம் ஹுசைனின் சொந்த ஊரான தீக்ரித்தில் பொலிஸ் தலைமையக கட்டடம் ஒன்றில் கார் குண்டு வெடித்ததில் 15பேர் பலியானார்கள். மற்றும் 22பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் பற்றித் தீக்ரித் பொலிஸார் கூறியதாவது:

ஈராக்கில் உள்ள தீக்ரித் நகரம் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின சொந்த ஊராகும் இந்த ஊரில் பொலிஸ் தலைமை நிலைய கட்டடம் ஒன்று உள்ளது. இந்தக் கட்டடத்திற்குள் நேற்றுமுன்தினம் கார் ஒன்று வந்து நின்றது. திடீரென அந்தக் காரிலிருந்து வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இந்தப் பயங்கரமான குண்டுவெடிப்பில் அந்தக் கட்டடமே தீப்பற்றி எரிந்தது. அருகிலிருந்த வாகனங்கள் தூள் தூளாகச் சிதறியது.

அந்த இடத்தில் 10பொலிசாரின உடல் சிதறிக் கிடந்தது. மனித சதைகளும், ரத்தமும் அந்த இடத்தில குளம்போல் தேங்கிக் கிடந்தது. வானத்திற்கும், பூமிக்கும் ஒரே புகை மண்டலமாக காட்சியளித்தன. காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் மேலும் 5பேர் பலியானார்கள்.

சம்பவம் நடந்த இடத்திற்கு அம்புலன்சுகள் விரைந்து சென்று காயமடைந்தவர்களை மருத்துவமனையில சேர்த்தன. காயமடைந்த 22பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குண்டுவெடிப்பில் ஈடுபட்ட தீவரவாதிகளைப் பிடிக்க அமெரிக்க பாதுகாப்பு படையினர் நகரை சுற்றி சீல் வைத்துள்ளனர்.

நகரை விட்டு யாரும் வெளியேறாதபடி கண்காணிப்பிலும் பொலிசார் ஈடுபட்டுவருகின்றனர். தீக்ரித் நகர் பக்தாத்திலிருந்து 130கி.மீ தொலைவில் உள்ளது. ஈராக் முழுவதும் அமெரிக்கப் படைகளுக்கெதிராக ஈராக் தீவரவாதிகள் தொடர்ந்து இதுபோன்ற தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். (க)



போப்பாண்டவரின் உடல்நிலை மோசமாகி வருவதையடுத்து வாட்டிகனில் கார்னிவால் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம்.

# அரசியல் தலைவர்களை விமர்சித்த பத்திரிகையாளருக்கு 14 ஆண்டு சிறை

(டெகரான்)

உளவுவேலை பார்த்தது மற் றும் தலைவர்கள் பற்றி மதிப்புக்குறைவாக எழுதியது போன்ற அரசியல் குற்றங்களுக்காக ஈரான் நாட்டில் பத்திரிகையாளர் ஒருவருக்கு 14 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஈரான் வடக்கு பகுதியிலுள்ள கிலான் மாகாணத்தைச் சேர்ந்த 28 வயதுடைய பத்திரிகையாளருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த இளம் பத்திரிகையாளர், கிலானைச் சேர்ந்த ஒரு பத்திரிகையில் ஆசிரியராக உள்ளார். இவர் இணையத் தளங்களில் அரசியல் சார்ந்த கட்டுரைகளை எழுதவருகிறார்.

கட்டுரைகளில் ஈரான் நாட்டுத் தலைவர்களை மதிப்புக்குறைவாக எழுதியதாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

ஈரான் நாட்டு உளவுப்பிரிவு அமைச்சகம் சிகார்ச்சிக்கு அழைப்பாணை அனுப்பயது. இதைத் தொடர்ந்து இவர் கடநத மாதம் பொலிசாரால் கைது செய்யப்படடார். மேலும், சில முக்கிய விஷயங்களில் உளவு வேலை செய்ததாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்தது.

கிலானில் உள்ள புரட்சிக்காரர்களை விசாரிக்கும் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை இவருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுளளது.

பத்திரிகையாளர் சிகார்சியின் கைதுக்கு அந்நாட்டு மனித உரிமை ஆர்வலர்களிடம் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதுகுறித்து கடந்த புதன்கிழமை டெகரானில் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த சைபசதே என்பவர் நிருபர்களிடம் கூறியதாவது,

பத்திரிகையாளர் சிகார்ச்சியை கைது செய்தது, அவரிடம் விசாரணை நடத்தியது மறறும் காவலில் வைத்திருந்தது உள்ளிட்ட அனைத்து விஷயங்களிலும் பொலிஸார் தரப்பில் எவ்வாறெல்லாம் தவறாக நடந்து கொண்டனர் என்பது குறித்து 12 பக்க அறிக்கை தயார் செய்துள்ளேன்.

அவர் மீதான குற்றங்கள் அரசியல் மற்றும் பத்திரிகை சாந்தவைகளாக இருப்பதால் அவரை பொது கோட்டில்தான விசாரணை செய்திருகக வேண்டும்.

ஆனால் அவ்வாறு இல்லாமல் புரட்சிக்காரர்களை விசாரிக்கும் கோர்ட்டில் விசாரணை நடந்துள்ளது. இதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய முடிவு செய்துள்ளோம். இவ்வாறு சைபசதே கூறினார். (க)



திரிபுராவின் அகர்தலாவில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற நாட்டியத் திருவிழாவில் வில்போல வளைந்து நடனமாடிய ரியாங் பழங்குடியின பெண்.

உலக தரிசனம்

# செவ்வாய்க் கிரகத்தில் பாரிய 'பனிக்கடல்'

(ஆம்ஸ்டர்டாம்)

செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழ முடியுமா? அந்தக் கிரகத்தின் தட்பவெப்ப சூழ்நிலை என்ன என்பது குறித்து உலகம் முழுவதும் ஆராய்ச்சி நடக்கிறது.

அமெரிக்காவும், ஐரோப்பாவும் போட்டி போட்டுக்கொண்டு இதற்கான வேலைகளில் ஈடுபட்டுவருகின்றன.

அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பும், ஐரோப்பா விண்வெளி ஆராய்ச்சி மையமும் செயற்கைக் கோளை அனுப்பி செவ்வாய்க்கிரகத்தைப் படம்பிடித்து வருகின்றன.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் செவ்வாய்க்கிரகத்தல் முன்பு கடல் மற்றும் ஆறு இருந்ததாகவும, காலநிலை மாற்றத்தால் அவை மறைந்துவிட்டதாகவும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.



இவர்களின் கருத்துக்கு மாறான தகவலை ஐரோப்பிய விண்வெளி அமைப்பினர் தெரிவித்திருக்கிறார்கள். செவ்வாயில் 'பனிக்கடல்' இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் அனுப்பிய 'செவ்வாய் எக்ஸ்பிரஸ்' எனற விண்கலம் தற்போது செவ்வாய்க்கிரகத்தைச சுற்றி வருகிறது. அந்த விண்கலம் அனுப்பிய புகைப் படத்தில் பனிக்கடல் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதுபற்றி விஞ்ஞானிகள் கூறியதாவது,

கடந்த சில மாதங்களாக மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் செவ்வாயில் பனிக்கட்டி மற்றும் தண்ணீர் இருப்பது தெரியவந்துள்ளது.

தூசி மற்றும் புகைமூட்டம் பனக்கட்டியை மறைத்து இருக்கிறது. அந்தாட்டிக்கா கண்டத்தில் உள்ளது போன்று பாறை போன்ற அமைப்பில் பனிக்கட்டிகள் காட்சியளிக்கின்றன. அதன் அடியில் தண்ணீர் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் பார்க்கும்போது மிகப் பெரிய பனிக்கடல் செவ்வாய் கிரகத்தில் உள்ளது.

இந்தப் பனிக்கடல் 50 இலட்சம் வருடத்திற்கு முன்பு உருவாகி இருக்கலாம். கிட்டத்தட்ட 500மைல் நீள அகலத்தில் இந்த பனிக்கடல் உள்ளது.

இதனால் செவ்வாய்க்கிரகத்தில் காலநிலை மாற்றம் ஏற்பட்டால் வெள்ள அபாயம் ஏற்படும் சூழநிலை உள்ளது என அவர்கள் தெரிவித்தனர். (க)

# 24 கரட் தங்கத்தில் கழிப்பறை அமைப்பு

(லண்டன்)

24 கரட் தங்கத்தில் கட்டப்பட்ட கழிப்பறை கொங்கொங்கில் அமைக்கப்பட்டுள்ளது.

கொங்கொங்கில் உள்ள நகைக் கடை ஒன்றில் முழுக்க முழுக்க 24 கரட் தங்கம் மற்றும் வைரக்கற்களால் கட்டப்பட்ட கழிப்பறை ஒன்று உள்ளது.

இந்தக் கழிப்பறை கொங்கொங் அரசின் சுற்றுலா தகவல் கையேட்டிலும் இடம்பெற்றிருந்தது.

ஆனால் சமீபகாலமாக தங்க கழிப்பறையைக் காணவரும் சுற்றுலா பயணிகளை நகைக்கடை ஊழியர்கள் அலட்சியப்படுத்துவதாக புகார் எழுந்துள்ளது.

இதையடுத்து கொங்கொங அரசு தனது சுற்றுலா தகவல் கையேட்டில் இருந்து தங்க கழிப்பறை சிறப்பு பகுதிகளை நீக்கிவிட்டது. (க)



மத்திய ஈரானை கடும் பூகம்பம் உலுக்கியது. இதில் 400 பேர் உயிரோடு புதைந்துமாண்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். கெர்மான் மாகாணத்தில் உள்ள பல கிராமங்களும், நகரங்களும் இருந்த இடம் தெரியாமல் போயின. இந்த நிலநடுக்கத்தில் உறவினர்களையும் வீடுகளையும் இழந்து தவிக்கும் மக்கள்.

## இன்று ஒரு தகவல்

# உடல் மொழி

ஒருவர் யாரிடமோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசிக் கொண்டிருப்பது என்னவென்று நமது காதில் விழவில்லை. இருந்தாலும் அவர் பேசிக் கொள்வது நல்ல செய்தியா. கெட்ட செய்தியா என்பதை அவரது முகத்தைப் பார்த்தே நம்மால் யூகிக்க முடிகிறது.

மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும் போது முகம மலர்கிறது. புன்னகை பூக்கும். இதில் ஒருவிடயத்தைக் கவனியுங்கள். நம்மிடம் பேசிக்கொண்டிருப்பவர் எதிரில இல்லை. அவர் நமது குரலை மட்டும் தான் கேட்கப் போகிறார். நமது முகம் எப்படியிருக்கிறதென்பதை அவா பார்க்கப் போவதில்லை. அப்படி இருந்தும் நமது முகம் ஏன் மலர வேண்டும்?

இதைத்தான் 'உடல்மொழி' என்கின்றார்கள். நம்மையறியாமலேயே நமது உடல் செய்திகளைத் தெரிவிக்கின்றது பாருங்கள். அதுதான் உடல்மொழி. ஒருவர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டே அவர் நண்பருடன் பேசுகிறாரா? மனைவியுடன் பேசுகிறாரா? குழந்தையுடன் பேசுகிறாரா மேலதிகாரியுடன் பேசுகிறாரா? அவருக்குக் கீழே வேலை செய்பவரிடம் பேசுகிறாரா? என்பதைக் கண்டுபிடிக்க லாம். காரணம் உடல்மொழி. இதைப் பற்றியெல்லாம் கூட சில நிபுணர்கள் சில விபரங்களைச் சொல்கிறார்கள்.

குறிப்பாக ஒருவர் அவரது நாற்காலியில் கிட்டத்தட்ட படுத்துக் கொள்ளாத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். எதிரிலிருப்பவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம். தலை சொறிவது, வேறு வேறு திசையில் பார்ப்பது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப் போட்டு உட்காருவது, களைப் பாகக் கைவிரல்களைப் பின்னிக்கொள்வது , அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பது இப்படியெல்லாம் ஒருவர் செய்து கொண்டி ருந்தால் நாம் விரைவாக அவ்விடத்தை விட்டு வெளியேறி விடுவது நல்லது.

ஏனென்றால் இதெல்லாம் அவரது சலிப்பு, சோர்வு, ஆர் வமின்மை இதற்கு அடையாளம். நமது பேச்சு அவ ருக்கு ஆர்வமில்லை என்று அர்த்தம். அதே நேரத்தில் நாற் காலி நுனியில் அமர்ந்து உடலை முன்னுக்கு நகர்த்தல் எதிரில், இருப்பவர் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக்

# சுனாமி குறித்து தெளிவுபடுத்தும் பொறுப்பு முப்படை பொலிஸாரிடம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் தொடர்பான பாராளுமன்ற அவசர அனர்த்த முகாமைத்துவக்குழு நேற்று முன் தினம் மீண்டும் கூடியது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரலைத்தாக்கம் தொடர்பாக துரிதமாக மக்களைத் தெளிவுபடுத்துவதற்கான தொடர்பாடல் காணப்படாமை குறித்து நேற்று முன்தினம் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

சுனாமி அனர்த்தம் தொடர்பான பாராளுமன்ற அவசர அனர்த்த முகாமைத்துவக்குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தலைமையில் கூடியது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரலைத்தாக்கம் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்தும் பொறுப்பு முப்படை மற்றும் பொலிஸாருக்கு உரித்தானது என்று இங்கு தெரிவிக்கப்பட்டது.

கடற்படை அதிகாரிகளுக்கு அவர்களது பயிற்சிக் காலப்பகுதியில் வழங்கப்படுகின்ற சுனாமி முன் எச்சரிக்கைகளை மக்களைத் தெளிவுபடுத்துவதற்காக பயன்படுத்தவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இருப்பினும் கடல் பேரலைத்தாக்கம் தொடர்பான தகவல் கிடைத்தவுடன் தான் அந்த விடயம் குறித்து குறிப்பிட்ட பிரிவுகளைத் தெளிவுபடுத்தியதாக இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்ட முப்படைத்தலைவர்களும் பொலிஸ்மா அதிபரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். (க-4)

# புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயத்துக்கு ஆங்கில, அழகியல் பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை

(கல்வியங்காடு)

ஸ்ரீ புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயத்தில் ஆங்கிலம் மற்றும் அழகியல் பாடங்களுக்கு ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

கடந்த 20 வருடங்களாக இந்நிலை காணப்படுவதால் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். இதைவிட சில மாணவர்கள் தூர பிரதேச பாடசாலைகளை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது

இப் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் ஏனைய பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து வருகின்ற போதிலும் ஆங்கிலம், சித்திரம், நடனம், சங்கீதம் போன்ற பாடங்களுக்கு குறைந்த பெறுபேறுகளையே பெறுகின்றனர்.

ஆசிரியர்கள் இல்லாது காணப்படுகின்றமையாலேயே இந்நிலை உள்ளது. அண்மைக் காலத்தில் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களில் இருந்து கூட இப் பாடசாலைக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையானது பெரும் ஏமாற்றத்தையும் மனவேதனையையும் அளிப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ப-74)

# பருத்தித்துறை துறைமுக மருந்தகம் தும்பளைக்கு இடமாற்றப்பட்டுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகப பிரதேசத்தில் இயங்கி யுத்த அனர்த்தங்களில் பருத்தித்துறை அத்தியடிக்கு மாற்றப்பட்டிருந்த பருத்தித்துறை மத்திய மருந்தகம் தற்போது பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட இப் பருத்தித்துறை மத்திய மருந்தகத் திறப்புவிழா மருந்தக அபிவிருத்திக் குழுத் தலைவர் வின்சென்ற் டீபோல் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை மருந்தகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். கிராமசேவை அலுவலர் ஆர்.புலேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி கமலா, திருச்செல்வநாயகம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். கிராமசேவை அலுவலர் எஸ்.வசந்தகுமார் நன்றியுரை வழங்கினார்.

இம் மத்திய மருந்தகத்திற்கு பருத்தித்துறை தெங்கங்கிணற்றடியில் 30இலட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான

போட்டு உட்காருவது, களைப் பாக்க கைவிரல்களைப் பின்னிக்கொள்வது , அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பது இப்படியெல்லாம் ஒருவர் செய்து கொண்டிருந்தால் நாம் விரைவாக அவ்விடத்தை விட்டு வெளியேறி விடுவது நல்லது.

ஏனென்றால் இதெல்லாம் அவரது சலிப்பு, சோர்வு, ஆர்வமின்மை இதற்கு அடையாளம். நமது பேச்சு அவருக்கு ஆர்வமில்லை என்று அர்த்தம். அதே நேரத்தில் நாற் காலி நுனியில் அமர்ந்து உடலை முன்னுக்கு நகர்த்தல் எதிரில், இருப்பவர் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக் கேட்டாலும் உங்கள மீது மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும். நாம் எபபடிப்பட்டவர்கள் என்பதை நமது உடலும் நடை, உடை, பாவனையும் அடுத்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்து விடும்.

உங்கள் உடல், உங்கள் பார்வை, நடை, உட்காரும் விதம் போன்றவற்றை வைத்துக் கொண்டே நீங்கள் பொறுப்பானவரா, முரடரா, அலட்சியமானவரா, மரியாதை தெரிந்தவரா, அடக்கமானவரா, நம்பிக்கைக்கு உரியவரா, நாணயமில்லாதவரா, பயந்தவரா, திறமைசாலியா, அப்பாவியா என்பதைக் கண்டுபிடித்து விடலாம்.

அதனால் உடல்மொழியைப் புரிந்துகொண்டு நம்மைக கொஞ்சம் சரிசெய்து கொண்டால் வாழ்வில் சுலபமாகப பல காரியங்களைச் சாதித்துவிடலாம்.

ஒரு மனநல மருத்துவமனை. அங்கே ஒருவர் ஒரு நாற் காலியில் உட்கார்ந்து கொண்டு கார் ஓட்டுவது போல் பாவனை செய்து கொண்டிருந்தார். ஸ்டியரிங்கைத் திருப்புவது போலவும், பின்னால் வரும் வாகனத்தை நிற்கச் சொல்வது போலவும், அதன்பின் இவர் ஒதுங்கிக்கொண்டு அவருக்கு வழிவிடுவது போலவும் சேஷ்டைகள் செய்து கொண்டிருந்தார். அதைப் பார்த்த ஒருவர் பக்கத்தில் இருந்த ஒருவரிடம் "இவர் ஏன் இப்படிச் செய் கிறார்?" என்று கேட்டார். "இவருக்கு கார் ஓட்ட வேண்டும என்று ஆசை. அது நிறைவேறாமல் போனதால இப்படிச் செய்கிறார்" என்றார் அவர். "நீங்கள் சொல்லக் கூடாதா? இப்போது நீங்கள் கார் ஓட்டவில்லை. வெறும் கதிரையில் தான் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று" என்றார் அவர். அதற்கு இவர் "அது முடியாது சார். ஏனென்றால் அந்தக் காரை கழுவுவதற்காக தினமும் எனக்கு 10 ரூபா கொடுத்துக் கொண்டிருக்கிறார்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தும்பளைக்கு இடமாற்றப்பட்டுள்ளது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகப பிரதேசத்தில் இயங்கியுத்த அனர்த்தங்களில் பருத்தித்துறை அத்தியடிக்கு மாற்றப்பட்டிருந்த பருத்தித்துறை மத்திய மருந்தகம் தற்போது பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றிற்கு மாற்றப்பட்டுள்ளது.

மாற்றப்பட்ட இப் பருத்தித்துறை மத்திய மருந்தகத் திறப்புவிழா மருந்தக அபிவிருத்திக் குழுத் தலைவர் வின்செண்ற் டீபோல் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை மருந்தகத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். கிராமசேவை அலுவலர் ஆர்.புலேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி கமலா, திருச்செல்வநாயகம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். கிராமசேவை அலுவலர் எஸ்.வசந்தகுமார் நன்றியுரை வழங்கினார்.

இம் மத்திய மருந்தகத்திற்கு பருத்தித்துறை தெங்கங்கிணற்றடியில் 30இலட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-52)

## கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணிகள்

# வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் முழுவீச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பகுதிகளான மானிப்பாய், ஆனைக்கோட்டை, சுதுமலை, நவாலி, பண்டத்தரிப்பு போன்ற இடங்களில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணி கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளதாக பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் பிரதேச சபையின் உப அலுவலக சுகாதாரத் தொழிலாளர்களும இணைநது இந்தக் கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணியில் ஈடுபட்டுவருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆறுமாத காலங்களாக இப்பகுதிகளில் நாய்களை அழிக்கும் பணி மிகக் குறைந்தளவில் நடைபெற்றதால் பெருமளவு நாய்கள் பெருகி வீதிகளில் பொதுமக்களிற்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்திவருவதாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து சுகாதாரத் தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் அவசியம் எனவும் செயலாளர் மேலும தெரிவித்துள்ளார். மானிப்பாய், ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில முதல் இரு நாட்களில் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.(ப-252)

# மருதமுனை-சாய்ந்தமருது வரை மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

அரச உதவிகள் பாரபட்சமின்றி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து மருதமுனையிலிருந்து சாய்ந்தமருது வரை மீனவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை மேற்கொண்டனர்.

மருதமுனை சந்தியிலிருந்து சாய்ந்தமருது நகர மண்டபம் வரை நடைபெற்ற இந்தப் பேரணியில் சுமார் 300 பேர்வரை கலந்துகொண்டனர். மாவட்ட மீனவர் பேரவை என்ற பேரில் சுவரொட்டிகள் மூலம் இதற்கான அழைப்புகள் விடுக்கப்பட்டிருந்தன. பேரணியில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே கலநதுகொண்டனர்.

வடக்கு - கிழக்கு விவசாயிகளினதும் மீனவர்களினதும் பிரச்சினைகளுக்கு தேசிய மட்டத்தில தீர்வு காணப்பட வேண்டும். இராணுவ நெருக்கடி இல்லாமல் சுதந்திரமாக சகலரும் செயறபடச் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேணடும். உத்தேச கடல் பாதுகாப்பு வலயம், மீனவர்களின உரிமையாக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளும இவர்களினால் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தக்கோரிக்கைகளை அடங்கிய வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பிய இம்மீனவர்கள் இது தொடர்பான மனுக்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளித்தனர்.(க-8)

# வலிப்பைத் தூண்டும் காரணிகள்!

சில காரணங்கள் வலிப்பை அதிகரிப்பனவாகவும் அல்லது தூண்டுவனவாகவும் அமையலாம்.

இவற்றைத் தனியாக 'அனிச்சையாகத் தூண்டுதலால் ஏற்படும வலிப்பு' என்றும் கூறுகிறார்கள்.

## வலிப்பு ஏற்படக் காரணங்கள்

திடீரென ஏற்படும் மின்னல், பிரகாசமான ஒளி ஆகியவற்றால் விழித்திரை தூண்டப்படுகிறது. அப்போது அதனால், மூளையின் செல்கள் தூண்டப்பட்டு, 'வெளிச்ச மிகுதியால் ஏற்படும் வலிப்பு' தோன்றலாம். வெளிச்சம் தண்ணீரில் பட்டுப் பிரதிபலிக்கும்போதும், விட்டு விட்டு எரியும் வெளிச்சமான விளக்குகளாலும் கார் போன்ற வாகனங்களில் பயணம் செய்கின்றபோது கண்களில் விழும் வெளிச்சத்தாலும் வலிப்பு தூண்டப்படலாம்.

இன்றைய தலைமுறையின் பெரும்பகுதி நேரத்தைத் தொலைகாட்சி ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இந்தத் தொலைக்காட்சியினாலும் வலிப்பு ஏற்படலாம். குறிப்பாக தொலைக்காட்சி தோற்றத்தின் பெரும் பகுதி விழித்திரையில் விழுமளவிற்குக் குழந்தை மிகவும் அருகில் இருந்து பார்த்தாலும் மிகப்பெரிய திரையைக் கொண்ட தொலைக்காட்சியாய் இருந்தாலும் வலிப்பு ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

சிலருக்கு மொசைக் தரை மற்றும் தரையிலுள்ள சதுரமாகவோ, செவ்வகமா கவோ செய்யப்பட்டிருக்கும் 'டிசைன்'களைக் கூர்ந்து பார்ப்பதனாலும் வலிப்பு ஏற்படலாம். சிலருக்கு, அதிகமான சத்தம், திடீரென தோனறும் 'இடி' ஒலி போன்றவற்றினாலும் வலிப்பு ஏற்படலாம்.

சிலருக்கு வெந்நீரில் குளிக்கும் போது வலிப்பு ஏற்படலாம். இதனை 'வெந்நீரினால் ஏற்படும் வலிப்பு' என்பார்கள்.

## வலிப்பு நோயை கண்டுபிடிப்பதுஎப்படி

ஆஸ்துமா நோயாளிக்கு அந்நோய் ஏற்படுகின்ற போது மூச்சுத்திணறல், இருமல், பிரத்தியேக ஓசை ஆகியவை இருக்கும். அதற்குச் சிகிச்சை எடுத்த பிறகு, இந்தத் தொந்தரவுகள் மறைந்து விடும். எனவே, அறிகுறி இல்லாத நேரத்தில் நோயாளியைப் பரிசோதனை செய்கின்றபோது அவருக்குப் பாதிப்பு ஒன்றுமே இருக்காது. நோய் அறிகுறிகளும் இராது. அவர்கள் பார்ப்பதற்குச் சாதாரணமாகவே காணப்படுவார்கள்.

அவர்களைப் போன்றவர்கள் தாம் 'வலிப்பு நோயாளிகளும்' இவர்களுக்கு வலிப்பு ஏற்படும் போதுதான் தெரியும் அல்லது யாராவது பார்த்துத் தெரிவிக்க வேண்டும். வலிப்பு ஏற்படாத போது பரிசோதனை செய்து பார்த்து வலிப்பு நோயைக் கண்டறிய முடியாது.

எனவே, வலிப்பு நோயாளியிடம் அந்நோய் குறித்து விசாரிக்கவேண்டும். முதன் முதலாக வலிப்பு எப்போது ஏற்பட்டது அதன் பிறகு எவ்வளவு காலம் கழித்து மீண்டும் தோன்றியது என்பன போன்றவற்றை அறிந்து கொள்ளவேண்டும். குழந்தைகளுக்கு பெரும்பாலும் பெற்றோர்கள் இது குறித்த விபரங்களைத் தெரிவிப்பார்கள். ஒரு வேளை, வேலை செய்கின்ற இடத்தில் ஒருவருக்கு வலிப்பு சம்பவித்தால், அருகில் உள்ள ஊழியர்களும், நண்பர்களும் வலிப்பு எவ்வாறு ஏற்பட்டது. எவ்வளவு நேரம் நீடித்தது, கை, கால், பகுதிகளில் வலிப்பு தோன்றியதா, நோயாளி மயக்க மடைந்தாரா போன்ற விபரங்களைத் தெரிவிப்பார்கள். மேலும் எந்தக் காரணத்தினால் வலிப்பு தோன்றி ய்து என்னும் விபரத்தையும் கேட்டு அறியவேண்டும்.

வலிப்பு பகலில் ஏற்பட்டதா? இரவில் ஏற்பட்டதா என்பது குறித்தும் அறியவேண்டும்.

வலிப்புத் தோன்றுவதற்கு முன்பாக, முன்னுணர்வு நிலை, தொந்தரவு ஆகியன ஏற்பட்டனவா? எவ்வளவு நேரம் அந்தத் தொந்தரவுகள் இருந்தன? என்பன போன்ற விபரங்களையும் அறிய வேண்டும்.

மேலும், பல்வேறு உடல் அசைவுகளைக் குறித்த செய்திகளையும் சேகரிக்கவேண்டும்.

கால்களில் ஏற்படும் தசைப் பிடிப்பு, வலிப்பு, தன்னை அறியாமல் செய்யும் செயல்கள் ஆகியவற்றைக் குறித்தும் சம்பவம் நடந்த இடத்தில் உள்ளவர்க்ளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

மேலும், வலிப்பு தோன்றிய போது, நாக்கைக் கடித்தாரா, அதனால் நாக்கில் காயம் ஏற்பட்டதா என்பன போன்ற விபரங்களையும் அறியவேண்டும்.

வலிப்பு ஏற்பட்டு முடிந்து நோயாளி தன்னினைவிற்குத் திரும்பியவுடன், அவருக்குக் கை, கால்களில் வலி, தலை வலி, கிறக்கம் ஆகியவை ஏற்பட்டனவா என்பன போன்றவை குறித்தும் அறிய வேண்டும். இதுபோன்ற விபரங்கள் மூலந்தான் நோயாளிக்கு வலிப்பு ஏற்பட்டதையும், எதனால், எப்படி அது ஏற்பட்டது என்பதையும் எவ்வளவு நேரம் நீடித்தது, அதன் தன்மை என்ன என்பதையும் இது எந்த வகை வலிப்பைச் சேர்ந்தது அல்லது அது வலிப்பு போன்ற பிறநோயா என்பதையும் தீர்மானிக்க மருத்துவரால் இயலும்.

இதுபோன்ற விபரங்களைச் சேகரித்த பிறகு, வலிப்பு நோயாளியை மருத்துவர் பரிசோதனை செய்ய வேண்டும். வலிப்பு நோயை, நோயாளியைப் பரிசோதனை செய்து மட்டும் கண்டுபிடிக்க முடியாது. வலிப்பு ஏற்படாத நேரத்தில், நோயாளியைப் பரிசோதனை செய்து அவருக்கு ஏற்கனவே வலிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யவும் முடியாது.

மீண்டும் ஏற்படுமென உறுதி கூறவும் முடியாது.

என்றாலும், இந்த நோயாளிகளை மருத்துவர் நன்கு பரிசோதனை செய்வது அவசியம். இந்த நோயாளிகளைப் போதுமான மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும். இதன் மூலம், பல்வேறு உடற் பாதிப்பு நோய்களில் வலிப்பு ஏற்பட்டிருந்தால், அதனைக் கண்டறிய வாய்ப்புக் கிடைக்கும்.

இவர்களுக்கு, நாடித் துடிப்பு, இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம் ஆகியவற்றை நன்கு பரிசோதனை செய்யவேண்டும்.

கழுத்துப் பகுதியிலும், கண் பகுதியிலும் இரத்த ஓட்டத்தில் மாறுதல் ஏற்பட்டுள்ளதா என்பதை ஸ்டதஸ்கோப் வைத்து அறியவேண்டும். தலைப் பகுதியில் ஏதாவது காயம் உள்ளதா, ஏற்கனவே அடிபட்ட தழும்புகள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

## விழித்திரைப் பரிசோதனை

கண்களின் உட்பகுதியினை அதற்குரிய கருவி கொண்டு விழித்திரை மாற்றங்களை அறியவேண்டும். கண்விழிப் படலம் மற்றும் பார்வைத்திறன் போன்றவற்றையும் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும்.

கை, கால்களிலும் பரிசோதனை செய்து, அவற்றில் ஏதா

**டாக்டர் முத்துச்செல்லக்குமார்**

வது தளர்வுள்ளதா, மூட்டுகளில் மீள்சசி அதிகரித்துள்ளதா என்று நன்கு பரிசோதனை செய்யவேண்டும். பொதுவாக, நரம்பியல் பரிசோதனை செய்து, அவர்களுக்கு நரம்பு தொடர்பான கோளாறு ஏதாவது உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும்.

சில நோயாளிகளுக்கு வலிப்புத் தோன்றும்போது மருத்துவரிடம் அழைத்துச் செல்வார்கள். அந்நோயை நேரடியாகக் காண்பதால் மருத்துவரால் அதற்கு எளிதாகச் சிகிச்சை அளிக்க முடிகிறது. □

## மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் புத்த கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ள இப்போட்டி இல்லமெய்வல்லுநர் போட்டியில் அங்கம் வகிக்கும் இல்லங்களுக்கிடையிலேயே இடம் பெறவுள்ளது.

புத்தூர் கிழக்கு அருள்மிகு கருகப்பை ஈஸ்வரன் கோவில் முன்றலில் ஆரம்பிக்கும் இம்மரதன் ஓட்டம் ஆவரங்கால் அருள்மிகு சிவன் தேவஸ்தான முன்றலில் முடிவடையும் என அதிபர் நா.சிவஞானம் அறிவித்துளளார். (ப-74)

## நீதிநூல் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடாத்தி வரும், நீதிநூல் மனனப் போடடி இன்று காலை 9.00 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பல்வேறு பாடசாலைகளைச்சேர்ந்த தரம்-1, தரம்-2 ஐச்சேர்ந்த ஆயிரத்து 100 மாணவாகள் பங்குபற்றவுள்ளனர். (க)

## விளையாட்டுப் போட்டி

(துன்னாலை)

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் விளையாட்டுப்போட்டி இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டி மிக எளிமையாக நடத்தப்படவுள்ளதாக அதிபர் சிறிராமச்சந்திரன் தெரிவித்தார். (ப-9,113)

## விசாரணைப் பிரிவு ஆரம்பம்

(கோப்பாய்)

கோபபாய் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்ற விசாரணைப் பிரிவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இது பொலிஸ் நிலையத்தின் மேறகுப் பகுதியில்கடந்த 23 ஆம் திகதி முதல் இயங்கிவருகிறது. (ப-74)

## யுத்த பிராந்தியங்களில் உள்ள சிறுவர்களை பாதுகாக்க ஐ.நா.சபை நடவடிக்கை எடுக்கும்

### கொபி அனான் உறுதியளிக்கின்றார்

(கொழும்பு)

யுத்த பிராந்தியங்களிலுள்ள சிறுவர்களை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்கும் என ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் உறுதியளித்துள்ளார்.

சிறுவர்களுக்கெதிரான அட்டூழியங்கள் அதிகரித்துள்ள அதே வேளை, குற்றச்செயல்களில் ஈடுபடும் சிறுவர்களின் தொகையும் அதிகாித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் கூறியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் சிறுவர் தொடர்பான விவாதம் ஆரம்பிக்கும் நிலையிலேயே கொபி அனான் இவ்வாறு கருத்த வெளியிட்டுள்ளார்.

யுத்தச் சூழலில் வாழும் சிறுவர் தொடர்பான விசேட ஆலோசகரான ஓலரா ஒட்டுணுவுடன் இணைந்து தயாரித்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போர் சூழலில் வாழும் அநேகமான சிறுவர்கள் அடிக்கடி கொலை செய்யப்படுகிறார்கள்.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் காயங்களுக்கும் ஆளாகின்றனர்.

மேலும அவர்களின் பாடசாலைகள் தாக்கப்படுகின்றன. நிர்ப்பந்தத்தின் பேரில் படைகளுக்கு சேர்க்கப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் இவற்றிற்கு எதிராக பாதுகாப்பு சபை உறுதியான நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, சிறுவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தும் 11 நாடுகளைச் சேர்ந்த 42 குழுக்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புருண்டி, கொங்கோ, ஐவரி கோஸ்ட், சோமாலியா, சூடான், உகண்டா, மியன்மார், நேபாளம், இலங்கை, கொலம்பியா, பிலிப்பைன்ஸ் ஆகிய 11 நாடுகளின் பெயர்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யுத்த பிராந்தியங்களுக்கான ஆயுதவிநியோகத் தடை, இராணுவ உதவிகளுக்கான தடை மற்றும் முக்கிய தலைவர்களின் பயணத்தில் கட்டுப்பாடு அவசியம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓலரா ஒட்டுணுவின் அறிக்கையின படி உலகில் சுமார் 3 இலட்சம் சிறுவர் படை வீரர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (க-9)

### நியமனம்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆர்.நாகேந்திரராஜா வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (ப-52)


## வலி – கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## கேள்வி அறிவித்தல் - 2005

கோப்பாய் கந்தன் காடு சுடலைக் காணியில் கொள்களம் அமைப்பதற்கு இக்ராட் எம் 8 பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 28.02.2005 முதல் 10.03.2005 வரை
கேள்விகள் ஏற்றுக் கொள்ளபபடும் திகதி : 15.03.2005 பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 15.03.2005 மாலை 3.00 மணி

| மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி |
|---|---|---|
| 2000.00 | 500.00 | 75.00 |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "செயலாளர், வலி-கிழக்குப் பிரதேசசபை, தலைமை அலுவலகம், நீர்வேலி" என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல. 29, செட்த்தெரு, நல்லூர்" என்ற முகவரிக்கும் எதிர்வரும் 15.03.2005 ஆந் திகதி பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். "கொல்களம் அமைப்பதற்கான கூறுவிலை" என தபால் உறை யின் இடதுபக்க மூலையில் குறிப்பிடவும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வலி – கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
25.02.2005.

இராசரத்தினம் இராசதுரை,
செயலாளர்.

(C / 1125)

# மொழி அழிந்தால்

இனங்கள் மொழிகளின் பன்முகத் தன்மை கொண்ட இடங்கள். இயற்கையின் பன்முகத்தன்மை கொண்டவையாகவும் இருப்பது அசாதாரணமானதல்ல. இவ்விரண்டிற்குமான தொடர்புகள் அழமானவை, ஆய்வு செய்து அறியவேண்டியவை.

குறியீடுகள் அழியும்போது, கருத்துக்கள் சாகின்றன. சிந்தனைகள் புதைக்கப்படுகின்றன என்கிறார் சஹீர்கான். அவர் ஒரு மொழியியலாளர் அல்லர். ராஜஸ்தானின் லன்காஸ் பழங்குடியினத்திற்கே உரித்தான கமைச்சா எனும் நான்கு கம்புகள் கொண்ட இசைக் கருவியை அழகுற வாசிக்கும் எண்பது வயது இசைக் கலைஞர்.

இன்றைய தலைமுறையினர் இத்தகைய இசைக்கருவிகளை வாசிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. இது தவிர்க்க முடியாததே. இசையும் மொழிபோல, ஒரு குறியீடுதான். அன்றாட வாழ்க்கைக்கான வாழ்வு முறையையும், கலாசாரத்தையும், மொழியையும் இழக்கத் துணிந்த பல இசையையும், இசைக்கருவிகளையும் மட்டும் எப்படிக் காப்பாற்றமுடியும்? மொழியே செத்துக்கொண்டிருக்கிறது என்று புலம்புகிறார் அந்த முதியவர்.

கசாக்கின் வடமேற்குப் பகுதியில் பேசப்பட்டு வரும் உபைக் மொழியின் கடைசி வாரிசான டிப்விக்செங்கைக்கு மூன்று மகன்கள். யாருக்கும் உபைக் மொழியைப் பேசத் தெரியாது. புரிந்துகொள்வது கூடச் சிரமம். அவர்களுக்குத் துருக்கிய மொழி மட்டுமே தெரியும். அவர்கள் அவர் இறக்கும் முன்பே அவருக்கான கல்லறை வாசகங்களைத் தயாரித்து விட்டனர்.

'இதுதான் டிப்விக் செங்கின் கல்லறை'. உபைக் மொழியின் கடைசி வார்த்தை இவரால் தான் உச்சரிக்கப்பட்டது. 1992இல் செங் இறந்தார். அவருடன் அவரது உபைக் மொழியும் புதையுண்டு போனது. அழிந்துவரும் மொழிகள பற்றி ஆய்வு செய்துவரும் இங்கிலாந்துப் பேராசிரியர் ப்ரூஸ் கோனெல் மொழிகளின் இறப்பு எனும் கட்டுரையில் 1994அல் கொமிரான நாட்டின் மம்பலாக் பகுதியில் பல அற்புதமான மொழிகளைக் கேட்டேன். கசாபா எனும் மொழி பேசும் ஒரே மனிதராகப் போகோன் என்பவர் மட்டுமே இருந்தார்.

1995இல் நான் மீண்டும் கொமிரான் சென்றேன். போகோன் இல்லை. அவருடன்

மட்டுமே 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பேசுகின்றனர். மீதம் 95 சதவீதம் 10 இலட்சத திற்கும் குறைவானவர்களாலேயே பேசப்படுகின்றன.

பழங்குடி மொழிகளில் 1 கோடிப் பேர் பேசும் இன்கா இன மொழியும் பத்துப் பேரே பேசும் குருரிலம் எனும் பப்வுவாகினியா மொழியும் உள்ளன.

## அழிவுப் பகுதிகள்:

மொழிகளுக்கும் பூமியின் நிலப்பரப்புக்கும் தொடர்பு உண்டா? உலகின் அதிக மொழிகள் பேசும் பகுதிகள் இரண்டு. மேற்கு ஆபிரிக்கா தொடக்கம் கொங்கோ வழியாகக் கிழக்கு ஆபிரிக்காவரை ஒன்று. மற்றத் இந்தியா, தென்கிழக்கு ஆசியா, இந்தோனேஷியா, பப்புவாகினியா, பசுபிக் வரையிலானது.

இந்த வெப்பமண்டலப் பகுதிகளில் உள்ள 17 நாடுகளில் 60 சதவீதம் மொழிகள் பேசப்படுகின்றன. இது நிலப்பரப்பில் 9 சதவீதம் மட்டுமே. இவையாவும் வளரும் ஏழை நாடுகள். உயிரினப் பன்முகத்தன்மை செறிந்தன. உலகின் இயற்கைப் பன்முகத் தன்மை பெரிதும் ஆபத்துக்கு உள்ளான

சதவீத வகைகள் உள்ளன. இங்குதான் உலகின் அதிகமான கலாசாரக் குழுக்கள் உள்ளன என்கிறார்கள். 1,400 தனித்தன்மை வாய்ந்த நாட்டுப்புறப் பழங்குடியினர் வாழ்கின்றனர். கடலை ஒட்டிய அலையாத்திக் காடுகளில் 2,880 பழங்குடி இனமக்கள் (62%) வாழ்கின்றனர்.

எனவே உலகின் 200 இயற்கைப் பகுதிகள் அதிகமான இயற்கை வளங்களைப் பன்முகத்தன்மையை மட்டும் கொண்டதாக அன்றி, உலகின் அதிகபட்ச மனித இனப் பன் முகத்தன்மையையும் கொண்டுள்ளது உறுதியாகிறது.

## இது எதிர்பாராத ஒற்றுமையா?

வோஷிங்டன் மானுடவியல் பேராசிரியர் கிரீக், ஏரி ஸ்மித் தென்னமெரிக்காவின் மொழி, கலாசாரப் பன்முகத்தன்மைக்கும், இயற்கைப் பன்முகத்தன்மைக்கும் உள்ள ஒப்புமைகளை ஆய்வு செய்தார்.

ஐரோப்பியர்கள் இங்கு காலடி எடுத்து வைத்தபோது 275 மொழிகள் பேசப்பட்டுவந்தன. இயற்கை, பண்பாடு, மொழி இவற்றைத் தனித்தனியாகவும் ஒப்பிட்டும் இவர் ஆய்வுக்ள் மேற்கொண்டார். மரங்களின் அடர்த்திக்கும், மொழிகளுக்கும் உள்ள தொடர்பு இந்த ஒப்பாய்

புத் தனித்தன்மையாகவும் உருவாகின. பூகோள அமைப்பும் கலாசாரப் பாதிப்பும் மொழியின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இயற்கை வளங்களைச் சார்ந்தே மக்களின் பார்வையும், கருத்தும், மொழிகளும் உருவாகின. பழங்குடி மக்கள் இயற்கையின் இந்தப் பங்களிப்பை உணர்ந்து ஏற்றிருந்தனர்.

அலாஸ்கா சுதேசி இன மக்கள் மொழியியல் மையத்தின் தலைவர் மைக்கேல் குரூஸ், போகும் போக்கைப் பார்த்தால் இந்த நூற்றாண்டில் 90 சதவீத மொழிகள் சாவைச் சந்திக்கும். சிலர் 50 சதவீதம் மொழிகள் மட்டுமே சாகும் என்கின்றனர். கனடாவில் உள்ள 187 மொழிகளில் 149 மொழிகள் குழநதைகளுக்குக் கற்பிக்கப்படுவதில்லை. பேசப்படும் 60 மொழிகளில் 4 மட்டுமே உறுதியான அடித்தளத்துடன் நிற்கின்றன. பழங்குடி மக்களின் 250 மொழிகளில் 90 சதவீதம் சாவின் விளிம்பில் உள்ளன என்கிறார்.

'மங்கிவரும் குரல்கள்' நூலின் ஆசிரியர் டேனியல் நெட்டில் பழங்குடி மக்களின் மொழியில் ஒன்றோ, இரண்டோதான் அடுத்த நூற்றாண்டின் ஒளியைக் காணும். ஆபிரிக்காவிலும் நிலைமை வேறாக இல்லை. அங்கு பதிவு செய்யப்பட்டதில் 54 மொழிகள் சுவடற்றுப் போய்விட்டன. 116 மொழிகள் அதே அழிவின் பாதையில் செல்கின்றன என்கிறார்.

ஒரு மொழியைப் பேசும் மக்களினம் இயற்கையாகவோ, செயற்கையாகவோ கொல்லப்பட்டால், அவர்கள் சார்ந்த மொழி இயற்கையான சாவை எட்டி விடுகிறது. ஒரு நாடு தேசியப் பொதுக்கொள்கை, தேசிய மொழி, மையப்படுத்துதல், வளர்ச்சி, வசதி, உயர்கல்வி நவீனமயமாதல், முன்னேற்றம்

பொருளாதாரம் என எத்தனையோ காரணங்களை முன்வைத்து மக்களின் பன்முகத்

# இனம் அழியும்

இப்பகுதியிலேயே அதிக மொழிகள் உள்ளன.

மொழி உரிமைக்காகப் போராடி வரும் டெரலிங்குவா எனும் அமைப்பு பழங்குடி இனமகள் பற்றிய வரைபடம் ஒன்றை உருவாக்க முயன்றது. அதில் மிகவும் அழிவுக்குள்ளான ஆபத்துக்குள்ளான 200 பகுதிகளைக் குறிப்பிட்டனர்.

இவற்றை உலகின் '200 இயற்கைப் பகுதிகள்' என்கின்றனர். இவை அதிக நீரும், நிலப்பரப்பும் கொண்ட சிறப்புப் பகுதிகள். இங்கு உயிரினங்கள், தாவரங்கள், இயற்கை வளங்கள் செறிந்துள்ளன. அதுபோலவே 'இயற்கை மொழிக் குழுக்கள்' எனும் சொல்லும் பயன்படுகிறது. இவை ஒரே வகையான மொழிக்கலா

வில் தெளிவானது. மரங்களடர்ந்த வனப்பகுதியில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக கண்டுபிடித்தார். இதை டோவ்வின் ஆய்வும் உறுதி செய்கிறது.

இயற்கைப் பண்பாட்டுப் பன்முகத்தன்மையும், மானுடத்தின் உருவாக்கம் என்ற நூலின் ஆசிரியர் டேவிட் ஹார்மோன், இயற்கையின் பன்முகத்தன்மையே மொழியையும், மக்கள் வாழ்வு முறைகளையும் முடிவு செய்கிறது என்கிறார். பல்லேறு வேறுபாடுகள் கொண்ட இயற்கைச்சூழல் பெரிய நிலப்பரப்பு, தீவுகள்,. வெப்பதட்ப நிலை ஆகியன

தனமையையும் அவர்களின் கலாசார வெளிப்பாடான மொழிகளையும் அழிக்கலாம்.

உலகின் கலாசாரங்களின் வெளிப்பாடான மொழிகளின் சாவுக்கு உலகமயம் ஒரு முக்கியமான காரணமாக உருவெடுத்து வருகிறது. தொழில்நுட்பப் படையெடுப்பு மொழியின் சாவை விரைவுபடுத்துகிறது.

பெரும்பான்மையினரின் மொழியின் ஆதிக்கம், மொழிகளின் இனவழித் தனித்தன்மையின் அழிவுக்குக் காரணமாகிறது. கனடாவில வந்தேறிய ஆங்கிலம், அம் மக்களின் இனக்குழு மொழிகளை வென்றது. தென்னமெரிக்காவில்

புதையுண்டு போனது. அழிந்துவரும் மொழிகள பற்றி ஆய்வு செய்துவரும் இங்கிலாந்துப பேராசிரியர் ப்ரூஸ் கோனெல் மொழிகளின் இறப்பு எனும் கட்டுரையில் 1994அல் கொம்மிரான நாட்டின் மம்பலாக் பகுதியில் பல அற்புதமான மொழிகளைக் கேட்டேன். கசாபா எனும் மொழி பேசும் ஒரே மனிதராகப் போகோன் என்பவர் மட்டுமே இருந்தார்.

1995இல் நான் மீண்டும் கொமிரான் சென்றேன். போகோன் இல்லை. அவருடன் கசாபியும் இறந்துபோனது. அவரது பேச்சைப புரிந்து கொள்ளக்கூடியவராக இருந்த அவரது சகோதரி மட்டுமே உயிருடன் இருக்கிறார்.

அவருக்கும் அம்மொழியைப் பேசத் தெரியாது. அந்த வம்சத்தில் இனி அம்மொழி பேச யாருமே இல்லை என்கிறார்.

ஒரு மொழி சாகும்போது, உயிர்த்துடிப் புள்ள ஒரு உலகையே இழந்து போகிறோம். மொழி அந்த வட்டாரத்தின் அறிவு, ஞானம், வழக்கு, இயற்கை, உயிரினம் குறித்த அனைத்தையும் உட்கொண்ட ஞானச் செல்வம். மொழியின்சாவு இனத்தின் உயிர்த்துடிப்பின் சாவாகும். உலகில் 6,700 மொழிகள் பேசப்படுகின்றன. பேசும் மொழிகள் அனைத்தையும் கண்டு படித்துப் பட்டியலிடப்படவில்லை.

இந்தோனேஷியா, பப்புவாகினியா, தென்னாபிரிக்கா, மத்திய ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் இன்றும் புதிய புதிய மொழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவ்விதம் புதிய இரண்டு மொழிகள் பேசும் 30 குடும்பங்களைக கொண்ட சிறுகுழுக்கள், ஜகார்த்தாவிலிருந்து 2,000 மைல் தொலைவில் மம்பரமோ ஆற்றங் கரையில் (வஹுடேட், அங்கேடேட் எனும் குழுக்கள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'மொழிகளின் இறுப்பு' எனும் நூலின் ஆசிரியர் டேவிட் கிங்டல் அவை புதிய மொழிகளே என உறுதி செய்கிறார். மொழி பற்றிய கணக்கெடுப்புகள் நடத்தப்பட்ட பகுதிகளிலும் புதிய மொழிகள் பல தெரிய வருகின்றன. மொழி ஆய்வுகள குழப்பமாகவே உள்ளன. 6,700 மொழிகளில் பெரும்பாலானவை மிகச் சிலராலேயே பேசப்படுகின்றன. 10 மொழிகளில் பேசுவோர் உலகின் மக்கள் தொகையில் சிலரே.

சுவீடன் மொழியறிஞர் டோவ் உலகின் மிகப் பலரால் பேசப்படும் மொழி கூட முழுமையாக அறியப்படவில்லை. இவற்றை முறைப்படுத்தும் நெறிமுறை முடிவாகவில்லை. பெரிய மொழிகள் கூடப் புதிராக உள்ளன. நாம் பன்றிகளைத் தெரிந்துகொண்ட அளவு கூட மொழிகளைத் தெரிந்து கொள்ளவிலை என்று சலித்துக்கொள்கிறார்.

சராசரியாக 6,000 பேருக்கு ஒரு மொழி உள்ளது எனலாம். 300(5%) மொழிகளை

கள் பற்றிய வரைபடம் ஒன்றை உருவாக்க முயன்றது. அதில் மிகவும் அழிவுக்குள்ளான ஆபத்துக்குள்ளான 200 பகுதிகளைக் குறிப்பிட்டனர்.

இவற்றை உலகின் '200 இயற்கைப் பகுதிகள்' என்கின்றனர். இவை அதிக நீரும், நிலப்பரப்பும் கொண்ட சிறப்புப் பகுதிகள். இங்கு உயிரினங்கள், தாவரங்கள், இயற்கை வளங்கள் செறிந்துள்ளன. அதுபோலவே 'இயற்கை மொழிக் குழுக்கள்' எனும் சொல்லும் பயன்படுகிறது. இவை ஒரே வகையான மொழிக்கலாசாரம் கொண்ட இனக்குழுக்கள். இதைக் கொண்டே பிற குழுக்களிடமிருந்து இவற்றை வேறுபடுத்தி அறியமுடியும். 4,635 தனிப்பட்ட இயற்கைமொழிக் குழுக்கள் இந்த 200 இயற்கைப் பகுதிகளிலேயே உள்ளனர் எனக் குறிப்பிடுகின்றனர்.

இது உலகின் இயற்கை மொழிக் குழுக்களில் 67 சதவீதம். இயற்கைப் பன்முகத் தன்மை செறிந்த வெப்பமண்டல மழைக்காடுகள் நிலப்பரப்பில் 7 சதவீதம் மட்டுமே. இதில் தான் உலக உயிரினத்தின் 80 முதல் 90 எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக கண்டுபிடித்தார். இதை டோவ்வின் ஆய்வும் உறுதி செய்கிறது.

இயற்கைப் பண்பாட்டுப் பன்முகத்தன்மையும், மானுடத்தின் உருவாக்கம் என்ற நூலின் ஆசிரியர் டேவிட் ஹார்மோன், இயற்கையின் பன்முகத்தன்மையே மொழியையும், மக்கள் வாழ்வு முறைகளையும் முடிவு செய்கிறது என்கிறார். பல்லேறு வேறுபாடுகள் கொண்ட இயற்கைச்சூழல் பெரிய நிலப் பரப்பு, தீவுகள்,. வெப்பதட்ப நிலை ஆகியன மொழிகளின் உருவாக்கத்திற்கு அடிப்படைக் காரணம் என்கிறார்.

மக்கள் இயற்கையுடன் நெருக்கமாக வாழும் பொழுது அதன் ஒலி, தாக்கம் பாதிப்புகள் ஆகியவற்றிற்கு ஏற்ப சிறப்பு ஒலி வடிவத்தை மனிதன் உருவாக்கிக்கொள்கின்றான்.

எனவே சூழலுக்கும், தேவைக்கும் ஏற்ப மொழிகள் ஒவ்வொரு இனக்குழுவிலும் தனித் தன்மையுடன் உருவாகின.

குறியீடுகளாக உருவான ஒலிகள் படிப் படியாக மொழிகளாகவும், பண்பாட்டுச் சிறப் பாடான மொழிகளையும் அழிக்கலாம்.

உலகின் கலாசாரங்களின் வெளிப்பாடான மொழிகளின் சாவுக்கு உலகமயம் ஒரு முக்கியமான காரணமாக உருவெடுத்து வருகிறது. தொழில்நுட்பப் படையெடுப்பு மொழியின் சாவை விரைவுபடுத்துகிறது.

பெரும்பான்மையினரின் மொழியின் ஆதிக்கம், மொழிகளின் இனவழித் தனித்தன்மையின் அழிவுக்குக் காரணமாகிறது. கனடாவில வந்தேறிய ஆங்கிலம், அம் மக்களின் இனக்குழு மொழிகளை வென்றது. தென்னமெரிக்காவில் ஸ்பானிஷ், போர்த்துக்கிஸ் மொழிகள் பழங்குடிகளின் மொழிகளைக் கொலை செய்தன. இந்தியாவில வெள்ளையருடன் வந்த ஆங்கிலம், சுதேசி மொழிகளை அழித்தது பழைய வரலாறு.

இன்று ஹிந்தி, சமஸ்கிருதம் அந்த இடத்தைப் பெறுவதும், மொழிகளின் அழிவின தொடர்ச்சியாகவே இருக்கும். உலகப் பொது மொழியாக்கப்பட்டு வரும் கணனி மொழியின் தாக்கம் குறித்தும் விரிவான ஆழ்ந்த கண்காணிப்பும் ஆய்வும் தற்காலத்தில் அவசியமானதாகிறது.

*நன்றி இணையத்தளம்.*

---

**நாயன்மார்கட்டில் அதிசயம்**

# மாதாவின் கண்களிலிருந்து இரத்தம்,கண்ணீர் சிந்துகிறது

மாதாசிலை ஒன்றின் கண்களிலிருந்து இரத்தமும், கண்ணீரும் வழியும் அதிசயம் ஒன்று நாயன்மார்கட்டில் நிகழ்ந்துவருகிறது.

கண்ணர் விடும் மாதாவின் அதிசயத்தைப் பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.

நாயன்மார்கட்டு செம்மணி வதியல் உள்ள ஜெயம் என்பவரது வீட்டில் உள்ள மடுமாதா சொரூபத்தின் கண்களிலிருந்து இரத்தமும், கண்ணீரும் வழிந்தவண்ணம் உள்ளது.

கடந்த 20ஆம் திகதி முதல் இது வடிந்துகொண்டிருக்கிறது. இந்த அதிசயத்தினை ஏராளமானவர்கள் பார்வையிட்டு வணங்கி வருகின்றனர்.

இதன் உண்மைநிலை பற்றி அருட்தந்தையர்கள் சிலர் ஆராய்ந்து வருகின்றனர். அதோடு மாதாவின் கண்ணீர் விடுகின்ற இந்தக் காட்சி யானது அந்தப் பகுதியில் ஏதேனும் புது மைகள் நடக்கலாம் அல்லது ஆபத்துக்கள் நடக்கலாம் எனப் பேசப்படுகிறது. (ப-51)

# மெய்வன்மைப் போட்டி

கோப்பாய கிறிஸ்தவ கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 2மணிக்கு நவரட்ணராஜா விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உதவிப்பணிப்பாளர் ரி.சிவதெட்சிணாமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எஸ்.கோகுலராஜாவும், கௌரவ விருந்தினராக தமிழீழ விடுதலைப்புலிகளின் வலி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் க.சங்கரும் கலந்துகொளளவுள்ளனர். (ச-74)

# கௌரவிப்பு

(கொழும்புத்துறை)

இளவாலையைச் சேர்ந்த செவாலியர் அடைக்கலமுத்து மாஸ்டர் (அமுது)க்கு இலங்கை அரசினால் வழங்கப்படும் கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

செவாலியர் கலாபூசணம் அடைக்கலமுத்து மாஸ்டர்,கவிதை உட்பட பல நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடததக்கது. (ப-51)

# பதவி உயர்வு தேர்விற்கான வழிகாட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் தரம் II ஆ தரத்தைச் சேர்ந்த பொது எழுதுநர்சேவை, மற்றும் இணைந்த சேவைகளைச் சேர்ந்த பிற சேவைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை தரம் II அ விற்கு பதவியுயர்த்துவதற்குரிய பரீட்சைக்கான வழிகாட்டல் பயிற்சி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ் பயிற்சி வகுப்புக்கள் உள்ளூராட்சி எழுதுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான பாடத்திட்டத்திற்கமைவாக இப்பயிற்சி வகுப்புக்கள் பிரதி சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் ஏப்ரல் மாதம் வரை நடாத்தப்படவுள்ளது.

தரம் II அ விற்கான பரீட்சை ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சைக்குத் தோற்றும் சகல உத்தியோகத்தர்களையும் இப பயிற்சி வகுப்பில் கலந்து பயன் அடையுமாறு உள்ளூராட்சி எழுதுநர் சங்க செயலாளா செசந்திரசேகரம் அறிவித்துள்ளார். (ப-47)

# வேவு பார்க்க வந்த படையினர் மீதே போராளிகள் தாக்குதல் நடத்தினர்

## கேணல் தீபன் தெரிவிப்பு

கிளாலியில் உள்ள படையினர் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டமை காரணமாகவே எமது போராளிகள் அவர்கள் மீது தாக்குதலை நடத்தினர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

கிளாலிப் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பகுதிக்கு 40மீற்றர் அண்மையாக இரு இராணுவத்தின் இரு பார்வைத் தொலை நோக்கி, துப்பாக்கி, கைக்குண்டு சகிதம் முன்னகர்ந்தனர்.

இராணுவத்தினரின் முன்னரண் விடுதலைப்புலிகளால் பார்க்கக்கூடிய தானதாகும். இரு அரண்களுக்கும் இடையே ஆங்காங்கே பற்றைக்காடுகள் இருக்கின்றன.

இவற்றுக்கூடாக பதுங்கி வரும் போது மட்டுமே இப்பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டம் தெரியாது.

ஆனால் விடுதலைப்புலிகளின் அரணுக்கு 400மீற்றர் தொலைவில் தான் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்குத் தென்பட்டனர்.

வழிதவறியே இராணுவத்தினர் இப்பகுதிக்கு வந்ததாக உயர்படைத் தரப்பு தெரிவிப்பதானது பொய்யான கருத்தாகும்.

அவர்கள் வேவுக்குரிய தொலை நோக்கி, தற்காப்புக்கான துப்பாக்கி, கைக்குண்டு என்பவற்றை கொண்டு வந்திருக்கின்றனர்.

இதேவேளை கிளாலிக் கடற்பகுதியல் மூன்று படகுகளில் படையினர் நகர்ந்திருந்தனர்.

ஒரு போர் நடவடிக்கையின் அம்சமான வேவு நடவடிக்கையில் தான் அந்தப் படையினர் ஈடுபட்டது என்பது தெளிவான ஒன்று என அவர் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த இடத்தின் புவி நிலை ஆள்கூற்று விபரமும் எம்மால் எடுத்துக்காட்ட முடியும்.

கிளாலி இராணுவத்தினரின் படைத்தளம் பலம்வாய்ந்த முக்கியமானதொன்றாகும். இந்தத் தளத்தினை மையமாகக்கொண்டு பல நடவடிக்கைகள், படைப்பலப்படுத்தல்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்பாட்டு வசதிகளுக்கு மாறாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தினர் நடாத்தும் 46ஆவது வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை பிப.2.00மணிக்கு பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் த.கங்காபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட அரச அதிபர் கேகணேசும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, பாராளுமன்ற உறுப்பினர்களான சிவனேசன், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் மேலும் கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் சி.பசுபதி, வடமராட்சி அரசியல துறைப் பொறுப்பாளர் இன்பன, முன்னாள் சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ.பரமேஸ்வரி, வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பிரியன், யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் வே. கருணாநிதி, கொக்குவில் அமெரிக்க மிஷன தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் வெற்றிவேல்,பருத்தித்துறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இராசலிங்கம் மறறும் கிராம உத்தியோகத்தர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ரு-19)

# பொது மண்டபத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

துன்னாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நியாப் விவசாயத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொதுமண்டபம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, நியாப் பிரதித் திட்டப்பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன், பருத்தித்துறை பிரதேச செயலாளர் சு.வசந்தகுமார், வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் ந.இன்பம், சுனாமி கடல் அனர்த்த செயலாளர் செயலகத்தின் பணிப்பாளர் அபாலையா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை திட்டப்பணிப்பாளர் த.ஜெயராசா, பருத்தித்துறை உதவித் திட்டப்பணிப்பாளர் ராஜ்குமார், பருத்தித்துறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நிர்மலன், பருத்தித்துறை தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிறிகாந்தன், நிர்வாக உத்தியோகத்தர் சோ.சிவராஜன், பருத்தித்துறை கடற்றொழிலாளா கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமார், காணி நன்கொடையாளர் தி.இளவரதன், கிராம சேவை உத்தியோகத்தர் சோ.கிருஸ்ணராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ரு-19)

## தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு

# ரூ.8.9 மில்லியன் நிதியை ஜப்பான் அரசு வழங்கும்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை வைத்தியசாலையின் நீர்விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றல் தொடர்பான கட்டுமானங்களை மேற்கொள்வதற்கு ஜப்பான் அரசாங்கம் 8.9மில்லியன் ரூபாவினை வழங்கத் தீர்மானித்துள்ளது.

சுகாதார வசதிகள் குறைவாக உள்ள பிரதேசங்களில் சுகாதார வசதிகளை அதிகரிக்கும் ஜப்பான் அரசாங்கத்தின் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த நிதி வழங்கப்படவுளளது.

இந்தத் திட்டம் வடக்கு -கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டங்கள் இலங்கையின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதன்மூலம் ஜப்பானியர்களுக்கும், இலங்கையர்களுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுவடையும் என்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-4)

## இடைக்கால நிர்வாகம் தொடர்பில்

# அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவொரு பிரச்சினையுமில்லை

## - டிலான் பெரேரா

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள நிலைப்பாட்டில் எந்தவொரு பிரச்சினையும் இல்லையென்று பிரதியமைச்சர்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளரான பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனைக் குறிக்கோளாகக்

...ளது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டால் விடுதலைப்புலிகளின் நோக்கத்தை நிறை...

## 'சுனாமி' நிவாரணத்திற்கு

# காலாவதியான பொருட்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளில் காலாவதியான பொருட்கள் சுனாமி நிவாரணத்திற்கு வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளின்போதே இவ்வாறான...

...நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது பெருமளவில் காலாவதியான சுனாமி நிவாரணப் பொருட்கள கைப்பற்றப்பட்டதாகப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்

## இடைக்கால நிர்வாகம் தொடர்பில்

# அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவொரு பிரச்சினையுமில்லை

## - டிலான் பெரேரா

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் வெளியிட்டுள்ள நிலைப்பாட்டில் எந்தவொரு பிரச்சினையும் இல்லையென்று பிரதியமைச்சர்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளரான பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனைக் குறிக்கோளாகக் கொண்டு எந்தவொரு அரசியல் கட்சியும் அரசுக்கு வழங்கும் ஆதரவு குறித்து சவால்விடுமானால் அது அநீதியாகும்.

வடக்கு-கிழக்கு மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே அரசாங்கம் இவ்வாறான நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டால் விடுதலைப்புலிகளின் நோக்கத்தை நிறைவேற்ற முடியும்.

தென்மாகாண அரசியல்கட்சிகள் வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் தடைவிதிப்பதாக விடுதலைப் புலிகளின சர்வதேச சமூகத்திற்கு விளங்கப்படுத்துவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## இறை தியானம்

(பருத்தித்துறை)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த அனைத்து மக்களுக்காகவும், உளப்பாதிப்புற்றோா மற்றும் நோயாளரை ஆற்றுப்படுத்திக் குணமளிக்கும் இறை தியான வழிபாடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00மணிக்கு தும்பளை மெதடிஸ்த நேசச்சிற்றாலயத்தில் பருத்தித்துறை கட்டைவேலிச் சேகர முகாமைக் குரு அருட்திரு டேவிட் அழகராசா அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ப-35)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமாவை முடித்து வெளியேறிய முதலாம், இரண்டாம், மூன்றாம் அணியில் கடல்வள ஆசிரியாகளாக கடமையாற்றியவர்களுக்கும் மற்றும் ஏனையோருக்குமான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை 10மணியளவில் யாழ் கல்வி வலயத்தின் (யாழ்.கல்வி மேம்பாட்டுப் பேரவை) இல் இடம் பெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (க)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

## கல்வி நிர்வாக சேவையில் இணைந்த

# பட்டதாரிகளுக்கான கொடுப்பனவுகள் நேற்று முதல் வழங்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

கல்வி நிர்வாக சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் நேற்றுமுதல் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்வி நிர்வாக சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் நேற்று முதல் யாழ். கல்வி வலயத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிதியமைச்சினால் அறிவிக்கப்பட்ட அறிக்கையின்படி, சகல பட்டதாரிகளுக்கும் ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் முழுமையாக வழங்கப்படுகின்றன.

நிர்வாக தடங்கல் காரண மாக வெவ்வேறு திகதிகளில் பட்டதாரிகள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொணடதால் அவர்களது ஜனவரி மாதக் கொடுப்பனவுகளை முழுமையாக வழங்கும்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக, சகல பட்டதாரிகளுக்கும் ஜனவரி மாதக் கொடுபபனவுகள் முழுமையாக வழங்கபபட்டு வருகின்றது. (ந-19)

# சுனாமியால் வீடிழந்தோருக்கு இலங்கை வங்கி உதவி

சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தோருக்கு இலங்கை வங்கி உதவு தொகையை வழங்கவுள்ளது.

இதன்படி சுனாமி அனர்த்தத்தினால் வீடுகளை இழந்தோருக்கு 2லட்சத்து 50ஆயிரம் ரூபாவும் பகுதி அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இதைவிட, வர்த்தகர், கைத்தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்துக்கு வட்டியில்லாக் கடனையும் வழங்க இலங்கை வங்கி தீர்மானித்துள்ளது.

இவற்றின் மேலதிக விபரங்களைப் பெற இலங்கை வங்கி கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்காக இன்றும் நாளையும் வங்கி செயற்பாடுகள் நடைபெறவுள்ளன. (ப-9)

## 'சுனாமி' நிவாரணத்திற்கு

# காலாவதியான பொருட்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சில பகுதிகளில் காலாவதியான பொருட்கள் சுனாமி நிவாரணத்திற்கு வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கைகளின்போதே இவ்வாறான காலாவதியான உணவுப் பொருடகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஓந்தாச்சிமடம், களுவாஞ்சிக்குடி மற்றும் களுதாவளை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது பெருமளவில் காலாவதியான சுனாமி நிவாரணப் பொருட்கள கைப்பற்றப்பட்டதாகப் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவற்றை உட்கொண்டதனால் நோய்வாய்ப்பட்ட 15 பேர் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-9)

# சித்தியடைந்த மாணவர்களை தொடர்புகொள்ளக் கோரிக்கை

(சுண்டுக்குளி)

கடந்த ஆண்டு புனித சாள்ஸ் மகாவித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் பெண்களுக்கு உடையமைத்தல் பயிற்சி வழங்கப்பட்டு கடந்த டிசம்பர் மாதம் பரீட்சையும் நடாத்தப்பட்டது.

இப்பரீட்சையில் ஒன்பது பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவிகளின் விபரம் பின் வருமாறு,

யாழினி, சிவகௌரி, தீபிகா, துஷாந்தி, தயாசினி, சுகந்தி, சுகந்தமலர், ஜெயாழினி, ஜெசிதா.

இம் மாணவர்களை பாடசாலை அதிபர் எம்.ஞானப்பிரகாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப-13)

## நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியில்

# பிளவுகளை கண்டறிந்தது ஜப்பான்

(கம்பல்க்யாடோ)

இந்தோனேஷியாவில் சுமத்ராவில் கடலுக்கடியில் நில நடுக்கம் ஏற்பட்ட பகுதியில் பிளவு ஏற்பட்டிருப்பதை ஜப்பானின் நட்சுஷிமா கப்பல் கண்டறிந்துள்ளது.

கடந்த டிசம்பரில் சுனாமி உருவானதற்கு காரணமாக இருந்த நில நடுக்க பகுதிகளில், இந்த 'நட்சுஷிமா' கப்பல் ஆய்வை மேற்கொணடு வருகிறது.

இந்த கப்பலால் நீருக்குள் 3 கி.மீ.ஆழம்வரை சென்று ஆய்வு மேற்கொள்ள முடியும். மேலும் அதி நவீன கமரா, ஒலியைப் பதிவு செயயும் சாதனங்கள் இக்கப்பலில் உள்ளன.

இதனுடைய சில கண்டுபிடிப்புகள் செவ்வாய்க்கிழமை வெளியிடபபட்டன. அதில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல் முறையாக இப்போது தான் கடலுக்கடியில் நிலநடுக்கம் ஏற்படுத்திய மாற்றங்களை ஒளிப் பதிவுக் காட்சிகள் மூலம் உறுதி செய்துகொள்ள முடிந்திருக்கிறது.

கடலில் 2,100 - 2,300 மீற்றர் ஆழத்தில் பண்டா ஆசி பகுதியில் உள்ள சுனடாவில் சாய்வான பரப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பது கண்டறிப்பட்டுள்ளது.

இப்பகுதியில் காணப்படும் விரிசல்கள் - பிளவுகள் புதியவை எனவும் நிலநடுக்கத்தால் தான் இவை உண்டாகியிருக்கவேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். ஏனென்றால் சில பிளவின் முனைகள் இன்னும் கூர்மையாக இருக்கின்றனவாம். (க)

# மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ. பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கு 2005ஆம் ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது பதிவுகளை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக பரீட்சைக் கிளை பதிவாளர் அறிவித்துள்ளார்.

உரிய ஆவணங்களுடனும் பதிவுக் கட்டணத்துடனும் பதிவை மேற்கொள்ளுமாறு அவர்கள் கேட்கப்படுகின்றனர். இக்கற்கைநெறி அன்றைய தினமே ஆரம்பமாகிறது.

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,

ஆறுமுகம் அமலன், சோமலிங்கம் கோடீஸ்வரன், சீலன் ஜெயக்குமார், அமலதாசன் லிவின்ரன் விஸ்வ பெர்னாண்டோ, ஜோசின் இமாக்லற்றா லம்பெட், குமாரசாமி விபீஷன, பேரின்பநாதன வர்மன், சிவராஜா குகனேஸ்வரன், சிதம்பரப்பிள்ளை தயாசீலன், மேரி ஜக்குலின் பிரான்சிஸ், அன்ரனி தேவநாதன் லம்பெட், இதய கிறிஸ்ரா லம்பேட் ஜேம்ஸ், சிவ சிதம்பரம் மதீஷன், தவராசா தர்சன், மகாதேவன் கிருபாநாதன், செல்வராசா தயாளன், சின்னத்தம்பி ராகுலபதி, கணேசபிள்ளை செந்தீபன், மகேசன் உதயசங்கர், தேவஞானம் அன்ரன்விஜயகுமார், பிருந்தா முரளிதரன், கிருஷ்ணராசா பிருந்தாவன், சிவலிங்கம் கௌசல்யா, ராஜலிங்கம் கார்த்திகேயன், சந்திரசேகரம் சசிகுமார், பற்குணலிங்கம் ஜெயந்தன், கனகரட்ணம் அரியரட்ணம், மதிவதனி செல்லத்துரை, பிரியதர்ஷினி புவனேஸ்வரன், பரமு பாலகுமார், ராஜரட்ணம் வசீகரன், ராதிகா ராஜேந்திரா, குணரத்தினம் ஐங்கரன், பிரியதர்ஷினி பரம லோகராஜ சிங்கம், கலைவாணி நவரட்ணம், நற்குணம் ரமணன், தாரணி ராஜேந்திரம், சரவணபவன சாரதிலகன், இருதயதாஸ் அமலதாஸ், கந்தசாமி சதீஸ், லஜிதா பாலசுந்தரம், செல்வரதி செல்வராஜா, தர்ஷினி செல்வராஜா, பரமநாதன் அஜந்தன், சின்னத்துரை சத்தியசீலன், சீவரட்ணம் சிவனேசன், சிவலிங்கம் ரூபன், செல்வராசா சதீஸ்குமார், கோகிலம் செல்லத்துரை, பாலசிங்கம பேரின்பன், கார்த்திகா குணரட்ணம், வித்யா வேலும் மயிலும், ஜெயசுபாஜினி ஞானகணேசன், தில்லைநாதன் நிதர்சனன், ஸ்ரீபன் நீகன்ராஜ். (ப-7,95)

## உபகரணங்கள் வழங்கல்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு ஒதுக்கபட்ட நிதியிலிருந்து புங்குடுதீவு சிவலைபபிட்டி அம்பாள் விளையாட்டுக் கழகத்துக்கு 76 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும்,

புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்துக்கு 56 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் வேலணை பிரதேச செயலர் நந்தகோபாலால் வழங்கப்பட்டன. (ப-126)

## அன்பளிப்பு

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய பழைய மாணவரும், தற்போது சுவிஸ்சில் வசித்து வருபவருமான கிருஸ்ணபிள்ளை பாஸ்கரன் என்பவரினால் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியால்ய மாணவர்களுக்கு வழங்கபபட்டன. (ப-126)

## "ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்"



அளவற்ற அன்பு படைத்த தந்தையின் அன்பு அரவணைப்பை உணர்ந்து பார்க்காமல் செயல் பட்டதன் விளைவு சொத்துப் பிரிவினை, தீய நண்பர்களின் நட்பு. விளைவு - வாழ்வையே இழக்கின்றார்.

இந்தக் கசப்பான அனுபவம் அவனது வாழ்வைக் கேள்விக்குறியாக்குகின்றது. தன்னுடைய சுயமரியாதையை பன்றியின் உணவை தான் உண்ணுவதன் மூலம் இழக்கின்றார்.

**தவக்காலச் சிந்தனை**

அத்தகைய சூழலில் தன்னையே உணர்ந்து கொள்கிறார். தன்வாழ்வு சூழலையும், தந்தையோடு இருந்த சூழலையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றார். அவருடைய அனுபவம் அவரை மாற்றுகின்றது. வாழ்வைப் பெற்றுக கொள்கின்றார். நம்முடைய வாழ்வில் அநேக அனுபவங்களைப் பெறுகின்றோம். ஆனால் அனுபவங்களைப் பயன்படுத்தி நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்கின்றோமா? எதிர்மறையான பிரச்சாரங்கள், தகவல்கள், மனிதர்கள் எளிதில் கவர்ந்துவிடுகிறார்கள். நேர்மறையானவைகள், நல்லவைகள் அனைத்தும் மெதுவாகவே புரிந்துகொள்ளப்படுகின்றன.

காவலன்

## சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டார் ஸ்சைக்கிள்கள் வழங்கவேண்டும்

சுனாமி கடல் பேரலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு தமது மோட்டார் சைக்கிள்களை இழந்த பொதுச சுகாதாரப் பரிசோதகர்களிற்கு மோட்டார் சைக்கிள்களை உடனடியாக விநியோகிக்குமாறு கோரி இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் ரி.விக்கிரமசிங்க சுகாதார அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதுதொர்டர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் அகில இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைமையகத்தில் நடைபெற்றது.

அதில் சுனாமி காரணமாக 7 மாவட்டங்களிலிருந்து 50இற்கு மேற்பட்ட பொதுச் சுகாதாரட் பரிசோதகர்கள் தமது உடமைகள் சொத்துகள், ஆவணங்களை இழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து மக்களிற்கு சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கு மோட்டார்சைக்கிள் தேவையாக உள்ளது. இதனை கருத்திற்கொண்டு மோட்டார் சைக்கிளை இழந்த 40 உத்தியோகத்தர்களிற்கு உடனடியாக மோட்டார்சைக்கிள்களை வழங்குவது என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என தலைவர் மேலும் தெரிவித்துள்ளா.

மேலும், அனர்த்தங்களின் பின்பு கவனிக்கவேண்டிய சுகாதார முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் சகல உத்தியோகத்தர்களிற்கும் வழங்கவேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் மேற்படி கலந்துரையாடப்பட்டது. (ப-252)

## காதல்கடிதம் எழுதிய ரசிகருக்கு மியாமி நீதிமன்றம் எச்சரிக்கை

சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டால் அனா கோர்னி கோவா இருக்கும் திசைப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கக்கூடாது என அவரது தீவிர ரசிகருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவின் மியாமி கடற்கரைப் பகுதியில் வசிக்கும பிரபல டெனிஸ் நட்சத்திரம் அனா கோர்னி கோவாவுக்கு வில்லியம் லிபெஸ்கா என்ற 40வயது தீவிர ரசிகர் கடிதங்களாகவும், ஈமெயில் மூலமாகவும்



ஆயிரக்கணக்கில் காதல் கடிதங்களை எழுதித் தள்ளினார்.

இது தொடர்பாக அனா பொலிசில் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் அவரை கைதுசெய்து சிறையிலிட்டுள்ளனர்.

மியாமி நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்றபோது, அனா கோர்னி கோவா லிபெஸ்கா மானே...தேனே... என எழுதி அனுப்பிய காதல் கடிதங்களை நீதிபதியிடம் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணை முடிவில் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டால் அனா கோர்னி கோவா குடியிருக்கும் வீட்டில் இருந்து ஆயிரம் அடி தூரம் தள்ளியே குடியிருக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டது. வழக்கு விசாரணை தொடர்ந்தும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வுபெறுகிறார் ஜோன் ரைட்

இந்திய கிரிக்கெற் அணியின் பயிற்றுவிப்பாளராக இதுவரை காலமும் பணியாற்றிய நியூசிலாந்து அணியின் முன்னாள் தலைவர்



ஜோன் ரைட் எதிர்வரும் மே மாதத்துடன் தனது பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

தொடர்ந்தும் இந்திய அணிக்குப் பயிற்சியாளராகப் பணிபுரிய விரும்பாத ஜோன் ரைட் செய்தியாளருக்குத் தகவல் அளிக்கையில்,

பாகிஸ்தானுக்கு எதிரான தொடருககாக இந்திய அணி முழு மூச்சாகத் தயாராகும் அதேவேளை, கடந்த வருடம் இந்திய அணி பாகிஸதானில் விளையாடியதை விட இம்முறை சிறப்பாக விளையாடும்.

அததுடன், துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரம் களத்தில் நின்று அதிகளவில் ஓட்டங்களைக் குவித்தால் மட்டுமே வெற்றி பெறமுடியும்.

இந்திய அணிக்கு 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் வரை பயிற்சியளிக்கக் கூடியதாகப புதிய பயிற்றுவிப்பாளர் நியமிக்கப் படவேண்டும்.

இது தொடர்பாக கிரிக்கெற் சபையே முடிவெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேநேரம் பயிற்சியாளர் பதவியைத தொடர ஜோன்ரைட் தயங்குவதற்கான காரணம் குறித்து இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவிக்கையில்,

ஜோனரைட்டின் சொந்த முடிவில் தலையிட எமக்கு அதிகாரமில்லை. அவர் குடும்பத்தினரோடு அதிக நேரம் செலவிட விரும்புவதாலேயே இம் முடிவை எடுத்திருக்கிறார் என நான் நினைக்கிறேன் எனக் குறிப்பிட்டார். (ந-7)

## சிம்பாப்வே அணியில் மீண்டும் பிளிக்நொட்

ஒருவருட இடைவெளியின் பின்னர் சிமபாப்வே அணியில் இணைந்து கொணடுள்ளார் அன்டி பிளிக்நொட்.

சிம்பாப்வே அணியில் கடந்த வருடம் இன அடிப்படையில் வீரர்கள தெரிவுசெய்யப்படுவது தொடர்பாக ஏற்பட்ட குழப்பம் காரணமாக அணித்தலைவர் ஹீத் ஸ்ரிக் தலைமையில் 15 வெள்ளை இன வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டனர்.


இவர்களில் சகலதுறை ஆட்டக்காரர் பிளிக்நொட்டும் ஒருவா. இவர் தற்போது எந்தவித நிபந்தனையுமின்றி மீண்டும் அணியில் இணைந்து கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டுள்ள போதிலும் தற்போதைய தென்னாபிரிக்கத் தொடரில் பிளிக்நொட இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது என சிம்பாப்வே கிரிகெற் யூனியன் தெரிவித்திருக்கிறது. (ந-7)

## ஜிம்னாஸ்டிக்கில் இலங்கைக்கு 2 ஆம் இடம்

இந்தியாவின் அலகபாத் நகரில நடைபெற்ற மத்திய ஆசிய ஜிம்னாஸடிக் போட்டிகளில் இலங்கை வீரர்கள் தமது திறமையை வெளிக்காட்டியுள்ளனர்.

பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், உஸபெஸ்கிஸ்தான், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பங்குபற்றிய இப்போட்டியில் இலங்கை அணிக்கு இரண்டாம் இடம் கிடைத்திருக்கிறது. (ந-7)



டோஹாவில் நடந்த கடார் ஓபன் டென்னிஸ் போட்டியில், ரஷ்ய வீராங்கனை மரிய ஷரபோவா 6-1, 6-1 என்ற நேர் செட்களில் கீசெலா டுல்கோவை வீழ்த்தினார். இதன் மூலம் ஷரபோவா மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு - குறள்

வலம்புரி

## சொல்லியதை செய்துகாட்ட ஜனாதிபதி தயாரா?

விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபையின் திட்டவரைபிலிருந்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தயாராக இருப்பதாக செய்திகள் வெளிவந்தமை ஏற்கனவே தெரிந்ததே.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேசுவதற்கு அரசு இணங்கினால் மட்டுமே பேச்சுக்கள் நடைபெறும் என்பது தெரிந்த விடயம்.

இடைக்கால சபைத் திட்டவரைபு என்பதுீ, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியதன் விளைவாக, விடுதலைப் புலிகள் சர்வதேச நாடுகளுக்குச் சென்று அங்குள்ள இராஜ தந்திரிகள், சட்டவல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று நடைமுறைக்கு சாத்தியப்பாடான திட்டவரைபை தயாரித்திருந்தனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகளினால் தயாரிககப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபின் அடிப்படையில், பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசும் சம்மதம் தெரிவித்திருந்தது.

எனினும் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கு முன்னதாகவே அந்த அரசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கொண்டு கலைத்துவிட்டார். ஜனாதிபதி ஒரு கட்சியாகவும் ஆளும் தரப்பு இன்னொரு கட்சியாகவும் இருந்தால் எழக்கூடிய சிக்கல்கள் - பிரச்சினைகளை இலங்கை அரசு முன்னர் ஒருபோதும் அனுபவித்ததில்லை.

அத்தகையதோர் அனுபவிப்பு நிதர்சனமாக ஏற்பட்டபோது அது நாட்டில் ஏற்படக்கூடிய பெரியதொரு சமாதானத்தை இல்லாதொழித்துவிட்டது. இந் நிலைமை 1978 களில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பின் கொடை என்பது உணரப்படவேண்டிய விடயம். இவை யாவற்றையும் ஒருபுறத்தில் வைத்துவிட்டு தற்போதைய சமாதான நிலைமை குறித்து ஆராய்ந்தால் ஜே.வி.பி அரசியலில் இருக்கும்வரை அது சாத்தியமாகாது என்பது உறுதியாகிவிட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தபோது பத்திரிகையாளர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஒரு கேள்வியைக் தொடுத்தனர்.

"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஐக்கிய தேசிய முன்னணியைப் போல் காலம் கடத்தாமல் விரைவாக சமாதானப் பேச்சை ஆரம்பிப்போம் என பிரசாரம் செய்கிறீர்கள்.

"நீங்கள் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சியோ சமாதானத்தை வலுவாக எதிர்க்கிறது. இந் நிலையில் சமாதான விரோதக் கட்சியான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது சாத்தியமா" என்பது பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வி ஆகும்.

அதற்கு விடையளித்த ஜனாதிபதி ஜே.வி.பியை எவ்வாறு அடக்குவது என்பது எனக்குத் தெரியும் அதுபற்றி யாருமே கவலை கொள்ளத் தேவையில்லை எனக் கூறினார்.

இப்போது பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு அமைவாக சமாதான முயற்சியை ஜே.வி.பி எதிர்க்கிறது. இடைக்கால சபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்வோம் என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ இறுதி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அப்படியானால், சமாதான முயற்சியை குழப்ப ஜே.வி.பி. பேயாட்டம் ஆடத் தொடங்கிவிட்டது. இதனை ஜனாதிபதி எவ்வாறு அடக்கப்போகிறார் என்பது இப்போதைய ஆர்வமான எதிர்பார்ப்பாகும்.

# எதிர்பார்ப்புகள் நிறைவேறாத நிலையில் அரசிலிருந்து விலக இ.தொ.கா. தீர்மானம்

## இராஜினாமா கடிதமும் கையளிப்பு

**ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி கடந்த வருட இறுதியில் ஆளும் கட்சியில் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து விலகத் தீர்மானித்துள்ளது.**

இதுதொடர்பான தமது தீர்மானத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொணடமான், பிரதமர் மஹிந்தராஜபகஷ ஊடாக இலங்கை ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாக தகவலொன்று வெளியாகியுள்ளது.

குறிப்பிட்ட தீர்மானத்தின்படி தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சர் முத்துசிவலிங்கம் அதறகான பிரதி அமைச்சர் எம்.எஸ்.செல்லசாமி ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளனர். இதன்படி இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஊடாக தமது இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதிக்கு கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் கட்சியில் பதவிகளையும் சலுகைகளையும் எதிர்பார்த்து எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதில் இணைந்து கொள்ளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின எதிர்பார்ப்புக்கள் தற்போதைய அரசாங்கத்தில் சாதகமான பெறுபேறுகளை அளிக்கவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் பல தடவைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்திக்க முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் அதுவும் சரிவராத நிலையில் உரிய கௌரவம் தமக்குக கிடைக்காததால் இந்த எச்சரிக்கையை இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ அரசாங்கத்திற்கு விடுத்துள்ளதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம தொண்டமானுக்கு வீடமைப்பு, நகர அபிவிருத்தி மற்றும நீர் வழங்கல் அமைச்சு வழங்கப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் பாயிஸ் முஸ்தபாவிற்கு உல்லாசத் துறை பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ அரசாங்கத்திற்கு அழுத்தம கொடுத்து வந்துள்ளது. அதுவும் இதுவரை கைகூடவிலலை. இதனால் தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ விரக்தியடைந்து இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுளளதாகக் கருதபபடுகின்றது. பிந்திய தகவல்களின்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்யும் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதை அக்கட்சியின் பிரதிச் செயலாளர்களில் ஒருவரான ஆர்.யோகராஜன் உறுதிப்படுத்தியுள்ளார். (ப)

# அரசில் இருந்து உடனடியாக ஸ்ரீ.சு.கட்சி விலக வேண்டும்

## ஜே.வி.பி அதிரடிக் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று ஜே.வி.பி கேட்டுள்ளது.

ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜே.வி.பியினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இணைந்து கூட்டு அரசாங்கத்தினை ஏற்படுத்தினர். அதன்கீழ் இரு தரப்பும் பல இணக்கப்பாடுகளை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் தற்போது, இந்த இணக்கப்பாடுகளை உரிய முறையில் கடைப்பிடிக்காது அதனை மீறி வருகின்றது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

எனவே அரசாங்கத்தில் இருந்து சுதந்திரக் கட்சிதான் விலக வேண்டும் என்றார்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கு இறுதி முடிவு காண்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன்னர் இடைக்கால நிர்வாகசபை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமாயின் தாம் அதனை ஆட்சேபிக்கப் போவதாக ஜே.வி.பி தெரிவிக்கின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் ஜே.வி.பியின் இந்த செய்தியறிக்கையினை வெளியிட்டுள்ளனர்.

ஜே.வி.பயின் இந்த நிலைப்பாடானது கடந்த பொதுத்தேர்தலின் போது (கூட்டமைப்பு உருவாக்கும் போது) வழங்கப்பட்ட உறுதிமொழியில் இருந்து விலகிச் செல்வதற்குச் சமமாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதை விரும்பவில்லை என்றும், ஆனால் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத்தீர்வு காணப்படவேண்டும் என்றும், அந்தத்தீர்வு நாட்டினை பிரிவுக்குள்ளாக்கும் பிரச்சினையாக அமைந்து விடக்கூடாது என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-4,9)

# மீனவர் - படையினர் முறுகல் தொடர்கிறது

(திருநெல்வேலி)

வடமராட்சி பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் "வான்" தோன்றுவதற்கு படையினர் நேற்று முன்தினம் அனுமதித்திருந்தனர்.

இதனையடுத்து குறிப்பிட்ட பகுதியில் கடற்றொழிலாளர்கள் நேற்றுக்காலையிலிருந்து "வான்" பாதையை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். "வான்" பாதையை 6 அடியில் தோண்டிய நிலையில், அங்கு வந்த படையினர் 2 அடிக்கு மேல் வான் பாதையை தோண்ட முடியாதென்று தெரிவித்தனர். இதனையடுத்து படையினருககும் கடற்றொழிலாளர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

கடற்றொழிலாளர்கள் "வான்" துப்புரவுப்பணியை கைவிட்டனர். எனினும் தாம் சுப்பர்மடம் பகுதியிலிருந்து தொண்டமனாறு கடற்கரைப் பகுதி வரை "வான்" பாதையை துப்புரவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-43,35)

## நிர்வாகத் தெரிவு

(புங்குடுதீவு)

சரவணை மேற்கு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக்கூட்டம் கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு சரவணை மேற்கு கொட்டாங்காட்டு ஞானவைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக ச.கேதீஸ்வரனும் உபதலைவராக சி.செல்வராசாவும் செயலாளராக க. கணேசலிங்கமும் உப செயலாளராக பிரியதர்சினி சுந்தரலிங்கமும் பொருளாளராக இ.யோகநாதனும் நிர்வாக உறுப்பினர்களாக ம.ஜெயந்தனும் மா.செல்வரெட்ணமும், வை.தவநாயகமும், பா.கணேசலிங்கமும , த.யோகரெட்ணமும்,சி.பவானியும் போசகர்களாக சி.மகாலிங்கமும், கா.முத்துலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். (ப-126)

# கோடரி வெட்டில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மைத்துனர்களுக்கிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கோடரி வெட்டில் முடிந்தது. இதனால் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அராலி வடக்கில் நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நடராஜா ரஞ்சன் (வயது-24)என்பவரே காயமடைந்துள்ளார். குடும்பத் தகராறு காரணமாக இருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினையடுத்து ஒருவரை மற்றவர் கோடரியால் கொத்திக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-19)

## ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நங்கள் உலோகாயதவாதிகள். ஏனெனில் உடம்புதான் நீங்கள் என்று நினைக்கிறீர்கள். என்னை ஒருவன் குத்தினால் 'நான் குத்துப் பட்டேன்' என்கிறேன். அடித்தால் 'நான் அடி பட்டேன்' என்று சொல்கிறேன். நான் உடம்பு இல்லையென்றால் அப்படி ஏன் சொல்ல வேண்டும்? நான் ஆன்மா என்று சொல்லிப் பயனில்லை.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கையை யுத்தமும் சுனாமியும் மிக மோசமாகத்தாக்கியுள்ளன

(கொழும்பு)

இலங்கை மக்களைப் பாதித்துள்ள யுத்தமும் சுனாமியும் ஒரே வகையிலேயே மக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு அளித்தபேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப் பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில், இலங்கையை சுனாமி மிகவும் மோசமாகத் தாக்கியதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

இதனால் அரசும், புலிகளும் வடகிழக்கில் சுனாமிப் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கட்டமைப்பை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தினர்.

எமது இலங்கை விஜயத்தின் போது சு.ப.தமிழ்ச்செல்வன் ஜனாதிபதி மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம் இத்தகைய கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக நேர்வழியில நகர முடியுமென நாம் கருதுகின்றோம்.

சமாதான முயற்சிகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட எரிக்சொலஹெம் கடந்த மூன்று வருடகாலமாகவுள்ள யுத்திநிறுத்தத்தை நாம் பாராட்டவேண்டும் சில சந்தர்ப்பங்களில் ஒருசிலர் கொல்லப்பட்டனர் ஆனால் யுத்தநிறுத்ததின் பங்காளிகளான படையினருக்கோ, புலிகளுக்குமிடையிலோ எந்த வித நேரடியான சண்டையும் இடம்பெறவில்லை.

இந்த நிலைமைக்கு ஜனாதிபதிக்கும் படையினருக்கும், புலிகளின் தலைமைக்கும் போராளிகளுக்கும் பாராட்டுதெரிவிக்கவேண்டும். மூன்று வருடங்களாக இந்தயுத்த நிறுத்தத்தை இருதரப்பும் பேணிவந்துள்ளார்கள். இந்த நிலையிலிருந்து இருதரப்பும் பிரச்சினைக்கான அரசியல்தீர்வு நோக்கி படிப்படியாக நகரவேண்டும் என்று அப்பேட்டியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(இ-8)

## சுகவீனம் காரணமாக போராளி சாவு

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் நேற்றுச் சாவடைந்துள்ளார். நெடியகாடு மாணாங்காணை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கடற்புலி மேஜர் தயானந்தன் (சின்னராசா தங்கவடிவேல்) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இம் மாவீரரின் வித்துடல் நாளை அவரது இல்லத்திலிருந்து வல்லை இந்து மகளிர் வித்தியாலயத்திற்கு காலை 9மணிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் அங்கிருந்து காலை11 மணிக்கு எல்லாங்குளம்மாவீரர்துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு புனிதவிதை குழியில் வித்துடல் விதைக்கப்படும். (ச)

## சுனாமி மீள் கட்டுமானத்துக்கு உலகவங்கி 75 மில்.டொலர் மேலதிக நிதியாக வழங்கியது

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிககப்பட்ட பிரதேசங்களின் மீள் நிர்மாணப்பணிகளுக்காக 75 மில்லியன் அமெரிக்க டொலரகளை மேலதிக நிதியுதவியாக வழங்குவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது.

இந்தத்தீர்மானத்தை உலகவங்கி அறிவித்துள்ளது. ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்கனவே 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை இம்மாதம் உலக வங்கி வழங்கியிருந்தது.

தற்போது வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தொகையில் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாகவும் மிகுதி 45 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகவும் வழங்க தீர்மானித்துள்ளதாக உலகவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிதி உதவியானது பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு, வேலை வாய்ப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்காகவே வழங்கப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையினால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து இலங்கையை மீளக்கட்டியழுெப்புவதற்கு சுமார் 1,6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என சர்வதேச அமைப்புகள் மதிப்பீடு செய்துள்ளன. இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீட்டர் ஹரல்ட், இந்த நிதி ஒதுக்கீடுகளில் உலகவங்கி நெகிழ்வுப் போக்கை கடைப்பிடித்துள்ளதாக தெரிவித்துள்ளார். (இ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை காலை 9மணிக்கு அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பழைய மாணவர் சங்க உபதலைவரும் இளைப்பாறிய தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளருமான க.மயில்வாகனம் கலந்து கொள்ளவுள்ளார்.சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய சிரேஷ்ட ஆசிரியை திருமதி மீ.அருமைநாயகம் கலநது கொள்ளவுள்ளார். (ச)

## 12 அகதிகள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

இந்தியாவிலிருந்து படகு மூலம் தாயகம் திரும்பிய 12 அகதிகளை தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதிவான் எஸ்.ஜான் தாஸன் உத்தரவிட்டார்.

கடந்த 23ம் திகதி இராமேஸ்வரம் தனுஷ்கோடியிலிருந்து இந்திய மீன்பிடிப்படகு மூலம் தாயகம் திரும்பியபோது மணல் திட்டியில் அநாதரவாக இறக்கிவிடப்பட்ட நிலையில் கடற்படையினர் கைதுசெய்து பொலிஸில் ஒப்படைத்தனர்.

இவர்களை நேற்று பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே நீதிவான் அவர்களை சொந்தஇடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். (இ-8)

## சந்திரிகா அரசு...

அரசில் ஒரு அங்கமாக வில்லை. ஆனால், இனிமேல் எதிர்க்கட்சி வரிசையில தான் அமர்ந்திருப்போம். அரசால் முன்வைக்கப்படும் யோசனைகள் சட்டமூலங்கள் நாட்டிற்கு நன்மையளிப்பதாக இருந்தால் எமக்கு நன்மையளிப்பதாக இருந்தால அதற்கு ஆதரவாக வாக்களிப்போம் இல்லையேல் எதிராகத்தான் வாக்களிப்போம்.

நாம் கடந்த செப்ரம்பர் மாதத்திற்கு முன்னர் இருந்ததுபோல சுதந்திரமாக சுயாதீனமாக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் செயற்படுவோம். அத்துடன் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற அதிகாரிகளின் தகவலின்படி இந்த இ.தொ.காங்கிரஸின் அமைச்சர்கள் இருவரும் எதிர்க்கட்சியில் அமர ஆசனவசதி செய்து தரும்படி சபாநாயகருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது.

(இ-04)

## மனித உரிமை செயலகத்தில் நான்கு சிறுவர்கள் ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள்அமைப்பில் சுயவிருப்பின் பேரில் இணையச்சென்ற 18வயதுக்குட்பட்ட நான்கு சிறுவர்களை நேற்று விடுதலைப்புலிகளால் கிளிநொச்சியில் உள்ள வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் 12.45 மணியளவில் விடுதலைப்புலிகளின் கிளிநொச்சி மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் வின்சன், கிளிநொச்சி மக்கள்தொடர்பக மகளிர் பொறுப்பாளர் சந்திரி ஆகியோர் மனித உரிமைகள் செயலகப்பிரதிநிதி அச்சுதனிடம் இச்சிறுவர்களைக் கையளித்தனர்.

இவர்களில் ஒருவரை நேற்று பெற்றோர் பொறுப்பேற்றுச் சென்றுள்ளதாகவும ஏனைய மூவரையும் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் செயலகப்பிரதிநிதி அச்சுதன்தெரிவித்தார்.(ச-4)

## பொதுக்கட்டமைப்பை...

அன்ரன் பாலசிங்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தை விபரத்தையும் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புப்பற்றியும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினார்.

குறிப்பாக சமாதான உடன்படிக்கையில் முதலாவது சர்த்தின் எட்டாவது பந்தியில் குறிப்பிட்டுள்ள வடக்கு கிழக்கில் இயங்கும ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை களைவதுதொடர்பில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆவலாக இருக்கிறார் என்ற செய்தியையும் சொல்ஹெய்ம் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

அத்துடன் சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு உதவிகளை வழங்கவென பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவதில் விடுதலைப்புலிகள் ஆவலாய் இருபபதாகவும் அது உடனடியாக நிகழ்ந்தால் சிறப்பாக இருக்கும் என புலிகள் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவற்றை ஆவலுடன் கேட்ட ஜனாதிபதி விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட ஐவரின் கொலைக்கு தான் கண்டனம் தெரிவிப்பதாகவும், பாதுகாப்பு படையினருக்கும் சில ஆயுதக்குழுவினருக்கும் தொடர்பு இருப்பதாக அண்மைக்காலமாக வெளிவரும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதேவேளை போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டு மூன்று ஆண்டுகளை பூர்த்தி செய்ததருணத்தில் இலங்கை இராணுவத்தைச்சேர்ந்த ஒருவரை விடுதலைப்புலிகள் சுட்டுக்கொன்றமைக்கு தனதுஆழ்ந்த அனுதாபத்தையும் கண்டனத்தையும் அவர்தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஜனாதிபதியுடன் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பாக செயலாளர் எச்.எம்.எ.எஸ்.பரிவக்கார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

எரிக்சொல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கரும் கலந்துகொண்டார். (இ-4)

## சாள்சை சந்தித்து..

தெரியப்படுத்துவது முக்கியமான தொன்றாகவும் கருதுகின்றது. பிரித்தானிய பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் முக்கிய விடுதலைப் புலி உறுப்பினர் நிவாரணப்பங்கீட்டில் அரசின் பாரபட்சம் குறித்தும் மேலும் தெளிவுபடுத்தவுள்ளனர்.

இலங்கையிலுள்ள இங்கிலாந்து தூதரகத்தின் கூற்றின்படி சாள்ஸ் தனியாகவே மேற்படி பயணத்தை குறிப்பட்ட இடங்களுக்கு மேற்கொள்ள இருப்பதாகவும் இதனை அடுத்து அவுஸ்திரேலியாவுக்கான சுற்றுப்பயணம் தொடருவதாகவும் தெரிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் தடுத்து நிறுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் செயலாளர் கொபி அனானின்வடக்கு கிழக்குக்கான பயணத்தையடுத்து, விடுதலைப் புலிகளும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் மிகவும் கவலையடைந்திருப்பதாகவும், இளவரசர் சார்ள்ஸ் வடக்கு கிழக்கு தமிழ் பகுதிகளின் கோர அழிவைப் பார்வையிட வருகை தந்தால், அது தமிழ் மக்களுக்கு மிகவும் ஆறுதல் தரும் விடயமாக அமையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இளவரசர் சாள்ஸ் 6 மணிநேரமே இலங்கையில் தங்கவுள்ளதால் அவர் விடுதலைப்புலிகளை சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதாக அரசஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ச-8)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிபுகள்

யாழ்.குருநகர் பரிசுத்த புதுமை மாதா ஆலய கட்டட நிதிக்கான 03.02.2005 அன்று நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிபுகள்.

| | |
|---|---|
| 1ம் பரிசு இலக்கம்:- | 3607 |
| 2ம் பரிசு இலக்கம்:- | 3604 |
| 3ம் பரிசு இலக்கம்:- | 4290 |

ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள்:- 1851, 5722, 5542, 5718, 5490, 3851, 3612, 5721, 3567, இ.கண்ணன், கண்ணன் தையலகம் அளவெட்டி

புதுமை மாதா ஆலய நிர்வாகம்,
பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1126)










இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.